ஜெகத்தாரணி

# செந்தமிழ் வாசகம்

## நான்காம் வகுப்பு

(மூன்றாம் பருவம்)

ஆசிரியர்

**குரும்பை உலகநாதன்**

மற்றும் ஆசிரியர் குழு

அட்டைப் படம் மற்றும் புத்தக வடிவமைப்பு

**V.ஜெகந்நாதன்**

ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்

எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்

48/40, வடக்குச் சித்திரை வீதி, மதுரை – 625001

சென்னை மதுரை கோவை

© உரிமை பதிப்பாளருக்கே செந்தமிழ் வாசகம்
பதிப்பாளர் : ஜெஸ்ஸி பப்ளிகேஷன்ஸ்
நான்காம் பதிப்பு : 2023 (புதிய பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)
பாடநூல் தொகுப்பு : குரும்பை உலகநாதன்

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே !

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே !! வாழ்த்துதுமே !!!

– மனோன்மணியம் பெ.சுந்தரனார்

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

“நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்” என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

“ஒருபோதும் வன்முறையை நாடேன், என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் - பொருளாதார குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்” என்றும், நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# முகவுரை



"செந்தமிழ் வாசகம்" என்னும் இவ்வரிய நூல் பள்ளிச்சிறார்களின் அழகிய கரங்களில் தவழப்போவதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய குழந்தைகளின் பன்முக ஆற்றல்களான உணரல், படித்தல், பேசுதல், எழுதுதல், வரைதல், வண்ணமிடுதல், கற்பனைத்திறன் வளர்த்தல், பாடுதல், ஆடுதல் போன்றவற்றை வளர்ப்பதில் இந்நூல் உறுதுணை புரியும் என்று நம்புகிறோம்.

சின்னஞ்சிறு மழலைச் செல்வங்கள் சிந்தை மகிழப் படிக்கும் வகையில் அழகாகவும் அற்புதமாகவும் அமைந்துள்ளது, இந்த "செந்தமிழ் வாசகம்". தமிழை, தமிழ்ச்சொற்களை எளியமுறையில் அறியவும், எழுதவும் ஏற்ற முறையில் எளிமையும் இனிமையும் பொருந்திய வார்த்தைகளைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. சொற்களின் பொருளை விளக்குவதற்கு ஆங்காங்கே அழகிய படங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அறநெறியைப் போதிக்கும் வண்ணம் அற்புதமான சிறுசிறு பாடல் தொகுப்பினையும், நீதிக்கதைகளையும் ஆங்காங்கே ஆசிரியர் கையாண்டுள்ளது குழந்தைகளின் படிப்பாற்றலை ஊக்குவிக்கும். கதை, கவிதைகளின் மூலம் சிறந்த வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளும் நீதிகளும் உணர்த்தப்பட்டுள்ளன. பாடத்துடன் இணைந்த பயிற்சிகள் குழந்தைகளின் புரிதல் திறனைக் கண்டறியும் வண்ணம் அமைந்துள்ளன. அரசு கல்வித்துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (**"CCE METHOD"**) நவீனப்படுத்தப்பட்ட கல்விமுறையைக் கையாண்டுள்ளது, நற்பயனை நல்க வல்லது.

குழந்தைகள் விரும்பிப் படிக்கும் வகையில், நல்ல சந்தத்துடன் கூடிய வெல்லத்தமிழ்ப் பாடல்களும், குழந்தைகளின் படிக்கும் வேட்கையை நன்கு தூண்டும் வண்ணம் அமையப்பெற்றுள்ளன.

இத்தகைய சீரிய எங்கள் முயற்சியினைப் பெற்றோர்களும், ஆசிரியப் பெருமக்களும் அங்கீகரித்து, தமிழ்மொழியினைப் பயிலும் மாணவச் செல்வங்களும் இந்நூலை நல்லதொரு வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். இப்புத்தகத்தின் நிறைகுறைகளை எங்களுடன் பகிர்ந்துக் கொள்ளத் தமிழ்கூறும் நல்லுலகோரை அன்புடன் வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்



# பொருளடக்கம்




| வ. எண் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | உலா வரும் செயற்கைக்கோள் | 5 |
| 2. | மாசில்லாத உலகம் படைப்போம் | 9 |
| 3. | காட்டுக்குள்ளே பாட்டுப்போட்டி | 16 |
| 4. | ஆனந்தம் விளையும் பூமியடி | 25 |
| 5. | கணினி உலகம் | 30 |
| 6. | மலையும் எதிரொலியும் | 39 |
| 7. | நீதிநெறி விளக்கம் | 47 |
| 8. | உறவுமுறைக்கடிதம் | 53 |
| 9. | காவ்யா | 59 |
| | அகரமுதலி | 70 |




# 1 உலா வரும் செயற்கைக்கோள்





பட்டுக் குழந்தைகள் வாருங்கள்
    பறவைக் கப்பல் பாருங்கள்
விட்டுச் சிறகை விரித்தபடி
    விண்ணில் பறக்குது பாருங்கள்
உலகைச் சுற்றி வந்திடுமே
    உயர உயரப் பறந்திடுமே
எல்லை இல்லா நற்பயனை
    எவர்க்கும் தந்து விளங்கிடுமே
விண்வெளி ஆய்வு செய்திடவே
    விண்ணில் சீறிப் பாய்ந்திடுமே
மண்ணிலுள்ள வளத்தை யெல்லாம்
    உண்மை யாகச் சொல்லிடுமே
தகவல் தொடர்பில் உதவிடுமே
    தன்னிச்சை யாக இயங்கிடுமே
தட்பவெப்ப நிலை யாவும்
    தக்க நேரத்தில் சொல்லிடுமே
அருகில் சுற்றும் கோள்களையும்
    அளவாய் நிழற்படம் எடுத்திடுமே
உருவில் சிறிய இடங்களையும்
    ஒவ்வொன் றாகக் காட்டிடுமே
கனிமவளமும் கடல் வளமும்
    கணக்காய்க் குறித்துக் காட்டிடுமே
மனித உயிரைக் காப்பதற்கே
    புயல் மழை வருவதை உணர்த்திடுமே
இதுவரை சொன்னது எதையென்று
    இன்னுங் கூடத் தெரியலையா?
அதுதான் உலாவரும் செயற்கைக்கோள்
    அறிந்தே மகிழ்ச்சி கொள்வோமே!

ஓசை நயமும், கருத்தும் மிக்க பாடல்களைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்

## பாடல் பொருள்

குழந்தைகள் பார்த்து மகிழுமாறு சிறகை விரித்தபடி வானில் பறந்து செல்லும் செயற்கைக்கோள் நமக்கு எல்லையற்ற பயன்களை வழங்குகிறது. அதற்கு அருகில் சுழலும் கோள்களை நிழற்படம் எடுத்து அனுப்புகிறது. மண்ணிலுள்ள வளங்களை துல்லியமாகக் காட்டுகிறது. கைபேசி, தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்றவற்றிற்கு உதவுகிறது. வானிலை மாற்றத்தால் ஏற்படும் புயல், மழை மற்றும் கனிம வளத்தையும் குறிப்பிடுவதோடு சுனாமி (ஆழிப்பேரலை) போன்ற பேரழிவுகள் வருவதற்கு முன்பே அறிவித்து மனித உயிர்களைப் பாதுகாக்கிறது.

### உரையாடலாம் வாங்க!

- பாடலை ஓசைநயத்துடன் பாடுக.
- செயற்கைக்கோள்களின் வகைகளை அறிந்துகொண்டு வந்து பேசுக.

### சிந்திப்போமா

செயற்கைக்கோள் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தால் இந்த உலகம் எப்படி இருந்திருக்கும்?

### சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. 'மண்ணிலுள்ள' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -------------

(அ) மண்ணி + லுள்ள (ஆ) மண்ணில் + உள்ள

(இ) மண் + உள்ள (ஈ) மண்ணில் + உள்ளே

2. 'நிழற்படம்' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_________________

(அ) நிழள் + படம் (ஆ) நிழை + படம்

(இ) நிழல் + படம் (ஈ) நிலை + படம்

3. 'உண்மை' என்ற சொல்லின் பொருள் ________________________________

(அ) பொய் (ஆ) தவறு

(இ) சரி (ஈ) மெய்

4. ‘நற்பயன்’ - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது______________

(அ) நல்ல + பயன் (ஆ) நன்மை + பயன்

(இ) நல் + பயன் (ஈ) நற் + பயன்

5. ‘அருகில்’ என்ற சொல்லின் எதிர்ச்சொல் ____________________

(அ) பக்கத்தில் (ஆ) எதிரில்

(இ) அண்மையில் (ஈ) தொலைவில்

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. “பறவைக்கப்பல்” எனக் குறிப்பிடப்படுவது எது?
2. செயற்கைக்கோளினால் விளையும் பயன்களுள் ஐந்தினைக் குறிப்பிடுக.

**பல சொற்கள் தரும் ஒரே பொருள்**

1. ஞாலம், வையகம், பார் __________________
2. பரவை, முந்நீர், ஆழி __________________
3. திங்கள், மதி, சந்திரன் __________________
4. ஆவல், விருப்பம், அவா __________________
5. ஆதி, ஆரம்பம், தொடக்கம் __________________

**இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் அமைந்துள்ள சொற்களைப் பாடலில் இருந்து எடுத்து எழுதுக.**

பட்டு - விட்டு ________________

________________ ________________

**ஒரே ஓசையில் முடியும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.**

வந்திடுமே - பறந்திடுமே ________________

________________ ________________

## வண்ணம் தீட்டி மகிழ்வோம்





## பாடலை நிறைவு செய்வோம்



பஞ்சு போன்ற மேகமே
பார்க்க நெஞ்சு மகிழுமே
காற்று வீசும் ____________________
கலைந்தே__________ __________
மக்கள் உள்ளம்________________
மழையாய் ____________ மேகமே!

## சொல் உருவாக்கலாமா!

கொடுக்கப்பட்ட சொற்களின் முதலெழுத்தை மாற்றினால், செயற்கைக்கோளுடன் தொடர்புபடுத்தலாம்.

அகவல்

தாள்கள்

தழை

அப்பம்

தனிமம்



### தெரிந்து கொள்வோம்

இந்தியா, வானில் செலுத்திய செயற்கைக்கோள்களுக்கு ஆரியபட்டர், பாஸ்கரர் ஆகியோரின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. இவர்கள் இருவரும் வானவியலிலும் கணிதவியலிலும் சிறந்து விளங்கியவர்கள்.

### செயல் திட்டம்

நம் நாட்டில் இதுவரை விண்ணுக்கு அனுப்பப்பட்ட செயற்கைக்கோள்களின் பெயர்களை எழுதி வருக.

# 2 மாசில்லாத உலகம் படைப்போம்



வகுப்பில் நுழைந்த ஆசிரியர் கையில் அழைப்பிதழ் இருந்தது. அது என்னவாக இருக்கும் என்ற ஆவல் மாணவர்களின் முகத்தில் நிலவியது.

மெல்ல எழுந்த முகிலன், “அது என்ன அழைப்பிதழ் ஐயா?” என்று கேட்டான்.

“மாணவர்களே! அறிவியல் திருவிழா ஒன்று நமது மாவட்டக் கல்வித்துறை சார்பில் நடைபெற உள்ளது. உங்களுடைய திறமையான புதுமை மிகுந்த அறிவியல் படைப்புகளை அவ்விழாவில் காட்சிக்கு வைக்கலாம். சிறந்த படைப்புகளுக்கு பரிசுகள் உண்டு. உங்கள் திறமையை வெளிப்படுத்த நல்லதொரு வாய்ப்பு என்றபடி கையில் வைத்திருந்த அழைப்பிதழை முகிலனிடம் கொடுத்து வகுப்பறையில் படிக்கச் சொன்னார். அதை ஆர்வமுடன் கேட்ட மாணவர்கள் என்ன மாதிரிகள் உருவாக்கலாம்” என்று சிந்தனையில் ஆழ்ந்தனர்.

மதுரை மாவட்டக் கல்வித்துறை நடத்தும் அறிவியல் திருவிழா - 2020

நாள் : 21.02.2020

மாணவச் செல்வங்களின் திறமையை வெளிப்படுத்த ஓர் அரிய வாய்ப்பு; உங்கள் அறிவியல் ஆர்வத்தினை, ஆய்வுச் சிந்தனைப் படைப்புகளாக மாற்றிடுங்கள்! பரிசுகளை வென்றிடுங்கள்!

தலைப்பு

மாசில்லாத உலகம்!

மகிழ்வான உலகம்!

குறிப்பு :

ஆய்வுகள் மாணவர்தம் சொந்த முயற்சியாகவும், இதுவரை வெளிவராத புதிய முன்னெடுப்பாகவும் அமைதல் வேண்டும்.

எதிர்கால அறிஞர்களுக்கு வாழ்த்துக்கள்!

இவண்

பள்ளிக்கல்வித்துறை,

மதுரை கல்வி மாவட்டம்

அவர்களின் முகக்குறிப்பை உணர்ந்த ஆசிரியர், வழக்கமான ஆய்வுகள் போல் இல்லாமல், புதுமையாக முயற்சி செய்யுங்கள். பரிசு பெறுவதனை விட உங்களுடைய மாறுபட்ட சிந்தனைக்கு முன்னுரிமை தாருங்கள். அதனையே செயல்படுத்துங்கள் என்று மாணவர்களுக்கு ஊக்கமூட்டினார்.

நாட்கள் நகர்ந்தன. அறிவியல் விழாநாளன்று அரங்கின் வாசலில் ஒரு பெரிய உருவம் உயர்ந்து நின்றது. முழுவதும் பயன்படுத்தித் தூக்கி எறியப்பட்ட மின்னணுக்கழிவுகளால் அவ்வுருவம் செய்யப்பட்டிருந்தது. அதன் மார்புப்பகுதியில் ஒரு மடிக்கணினி பொருத்தப்பட்டிருந்தது. தோள்பட்டையில் ஒலிப்பெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. அரக்கன் பேசுவது போல் அவ்வுருவம் பேசத் தொடங்கியது.

“அன்புக்குரியவர்களே!

நான் யாரென்று தெரிகிறதா? உங்களால் பயன்படுத்தித் தூக்கி எறிந்த மின்னணுப் பொருள்களின் கழிவுகளால் உருவாக்கப்பட்டவன் தான் நான். இப்போது உங்கள் முன் பேசுகிறேன்.



மின்னணுக்கழிவுகள் என்பது கணினிகள், மடிக்கணினிகள், மின் இசைக்கருவிகள், கைபேசிகள், புகைப்படக்கருவி, ஒலிநாடா, விரலி, நெகிழ், குறுந்தட்டு, தொலைக்காட்சிப்பெட்டிகள், கைக்கடிகாரங்கள், தொலைபேசிகள், அச்சிடும் கருவிகள், மின்கலங்கள் உள்ளிட்ட பல்வேறு மின்னணுக்கருவிகளிலிருந்து காலாவதியான மின்னணுக் கருவிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் மின்னணுக்கழிவுகள் ஆகும்.

நீர், நிலம், காற்று, ஒலி போன்றவற்றில் ஏற்படும் பல்வேறு மாசுகளைப் பற்றி, நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவையெல்லாம் மனிதர்களுக்கு மிகுந்த துன்பத்தைத் தருகின்றன. அவைபோலவே, சற்றும் குறையாத பாதிப்புகள் என்னாலும் ஏற்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? ஒவ்வொரு நாளும் உங்களால் தூக்கி எறியப்படும் மின்னணுக் கழிவுகள் நிலத்தையும், சுற்றுச்சூழலையும் பெரிதும் சீர்கேட்டுக்கு உள்ளாக்குகின்றன. இவற்றை எவ்வாறு மேலாண்மை செய்வது என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாக உள்ளது.

எங்களை முறையாக வகைப்படுத்தி, மறுசுழற்சி செய்வதொன்றே இச்சிக்கலுக்குத் தீர்வாகும். அதனை வலியுறுத்தவே ஓர் அரக்கனின் வடிவில் நான் வந்துள்ளேன்.

எனவே, மின்னணுப் பொருள்களைத் தேவைக்குப் பயன்படுத்துங்கள். கண்ட இடங்களில் எங்களைத் தூக்கி எறிந்திடாமல், முறையாக மறுசுழற்சிக்கு உட்படுத்துங்கள். அப்போதுதான் நாம் எந்தத் துன்பமும் இன்றி மகிழ்வாக வாழ்ந்திட முடியும்.

“மாசில்லாத உலகம் படைப்போம்; மகிழ்வான வாழ்வு பெறுவோம்!”

என்று தங்கு தடையின்றிப் பேசிக்கொண்டிருந்தது அவ்வுருவம்.

அரங்கினுள் நுழைந்த அனைவரும், மிகப்பெரிய அந்த அரக்க உருவத்தைப் பார்த்து வியந்தபடியும், அது கூறிய கருத்துகளைக் கேட்டுச் சிந்தித்தபடியும் சென்றனர். அந்த ஆண்டிற்கான சிறந்த அறிவியல் படைப்புக்குரிய விருது, முகிலனது பள்ளிக்கே கிடைத்தது.

மாணவர்களும் ஆசிரியர்களும் தலைமையாசிரியரும் முகிலனின் புதுமையான படைப்பைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

**கணினியில் உரைகள், வசனங்கள், முழக்கத்தொடர்கள் கேட்டல்**

**உரையாடலாம் வாங்க!**



- மின்னணுக்கழிவுகள் எந்தெந்த நாடுகளில் மறுசுழற்சி செய்கின்றனர் என்பதை அறிந்து கொண்டு வந்து உனது வகுப்பறையில் கலந்துரையாடுக.

**சிந்திப்போமா**



உன் பள்ளியில் நடைபெறப்போகும் அறிவியல் கண்காட்சிக்காக நீ புதுமையாகச் செய்ய விரும்புவது என்ன?

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. 'மாசு' - என்னும் சொல்லின் பொருள்____________________

(அ) தூய்மை (ஆ) தூய்மையின்மை

(இ) அழுக்கு (ஈ) கசடு

2. 'மின்னணு' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

(அ) மிண் + அனு (ஆ) மின் + னணு

(இ) மின் + அணு (ஈ) மிண் + னனு

3. 'தடையின்றி' - இச்சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது______________

(அ) தடை + யின்றி (ஆ) தடை + இன்றி

(இ) தடை + ஈன்றி (ஈ) தடைஇ + ன்றி

4. 'நெடிதுயர்ந்து' - இச்சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது______________

(அ) நெடிது + உயர்ந்து (ஆ) நெடி + துயர்ந்து

(இ) நெடிது + துயர்ந்து (ஈ) நெடிது + யர்ந்து

5. 'குறையாத' என்ற சொல்லின் எதிர்ச்சொல் ____________________

(அ) நிறையாத (ஆ) குறைபாடுடைய

(இ) குற்றமுடைய (ஈ) முடிக்கப்படாத

## கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி.

1. ஆசிரியர் வைத்திருந்த அழைப்பிதழில் என்ன செய்தி இருந்தது?

2. அறிவியல் விழாவில் கலந்து கொள்வதற்காக மாணவர்களை ஆசிரியர் எவ்வாறு ஊக்கப்படுத்தினார் ?

3. அறிவியல் விழாவில் காணப்பட்ட நெடிதுயர்ந்த உருவத்தை எப்படி உருவாக்கினர்?

4. சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்கு எவையெல்லாம் காரணமாக அமைகின்றன?

5. நாம் பயன்படுத்திய மின்பொருள்களை என்ன செய்ய வேண்டும்?

## பாடுவோம்! விடை கூறுவோம்

## எது சரி? எது தவறு?

| | | |
|---|---|---|
| சொல்லு, சொல்லு!<br>நீயும் சொல்லு!<br>எது சரி?<br>எது தவறு?<br>மேலே பார்!<br>கீழே பார்!<br>அங்கே பார்!<br>இங்கே பார்!<br>சொல்லு, சொல்லு!<br>நீயும் சொல்லு<br>எது சரி?<br>எது தவறு? | பொது இடங்களில் எச்சில் துப்புவது<br><br>பொதுவான இடங்களில் வரிசைமுறையை கடைபிடிப்பது<br><br>மழைநீரை சேமித்தல்<br><br>தன் சுத்தம் பேணாமை<br><br>சாலை விதிகளை மதிக்காமை<br><br>பிற உயிர்களைத் துன்புறுத்தாமை | ☐<br><br>☐<br><br>☐<br><br>☐<br><br>☐<br><br>☐ |

## தொடர் இரண்டு, விடை ஒன்று கண்டுபிடிப்பேன்

1. கட்டி எடுத்துச் செல்வது இது; கடித்து இரத்தம் குடிக்கும் இது - மூட்டை
2. நண்டு இருக்கும் இடம்; நங்கை விரும்பி அணியும் அணி -
3. வறட்சியில் வளரும் முள் செடி; எதையும் திருடும் பெண்மணி -



### மொழியோடு விளையாடலாம்

## ஒரு சொல்லுக்கு இரு பொருள் எழுதுக.

1. மாலை → ஒரு பொழுது / பூக்களால் தொடுப்பது
2. மணம் → ______ / ______
3. நகை → ______ / ______
4. அறை → ______ / ______
5. கல் → ______ / ______
6. நூல் → ______ / ______

## கலையும் கைவண்ணமும்

### காகிதத்தில் கிளி செய்வோமா!

**செய்முறை**

தேவையான பொருள் : பயன்படுத்திய தாள் ஒன்று




### இயற்கையைக் காப்போம்

வாடி வதங்கிய மரங்கள், வண்ணம் இழந்த இலைகள்; காய்ந்து கருகிய பூக்கள்; வறண்ட பூமி; வற்றிக்கிடக்கும் ஆறு; வெண்பஞ்சுமேகம்; பசுமை இழந்து பாளம் பாளமாக வெடித்துக் கிடக்கும் வயல்வெளிகள்; என்னவாயிற்று? அவற்றின் அழகெல்லாம் எங்கே போயிற்று? அதோ, ஒரு வீட்டின் அருகே தண்ணீர்க்குழாய். அதில் சொட்டுச் சொட்டாக நீர். அதனை நிரப்பிக்கொள்ள எத்தனை குடங்கள் வரிசையாக வரிசையாக. அப்பப்பா! இந்தச் சொட்டு நீர் நாளையும் வருமா? வினாக்குறிப்புடன் சிறுமி.

இந்த உரைப்பகுதிக்குப் பொருத்தமாக வாசகங்கள் எழுதுக.

நீரைச் சேமிப்போம் ; நீடுழி வாழ்வோம்.

**செயல் திட்டம்**

உங்கள் பள்ளியில் நடைபெற உள்ள ஆண்டுவிழா, இலக்கியமன்றவிழா போன்றவற்றுள் ஏதேனும் ஒரு விழாவுக்கு அழைப்பிதழை உருவாக்குக.

# 3 காட்டுக்குள்ளே பாட்டுப்போட்டி



காலை வேளை. நீலவானம் கதிரவன் ஒளியில் வெளுத்துக் காணப்பட்டது. காடே நிசப்தமாய் இருந்தது. வீசிய மென் காற்றால் மரங்கள் அசைந்தன. இலைகள் உரசும் சலசலப்பைத் தவிர, எங்கும் ஒரே அமைதி. கொழுத்த சேவலொன்று சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு, தயங்கியபடியே மெதுவாய் செடிகொடிகளின் மறைவிற்கு வந்தது. யாரும் தன்னைப் பார்க்கவில்லை என்பதை உறுதி செய்தபின் சேவல், “ கொக் .... கொக் .... கொக் .... கொக்கரக்கோ ......... கோ ......... கோ! ” என்று இராகம் போட்டுப் பாடியது.

அப்போது “கொல்லென்ற” சிரிப்பொலி கேட்டது. சட்டெனப் பாட்டை நிறுத்திய சேவல், “சுற்றிலும் யாருமே இல்லையே! யாராயிருக்கும்? என்று அறிய யாரது?” என்று கேட்டது.

“நாந்தான்; மேலே பாரு .....!” என்று மரத்தின் மேலேயிருந்து குரல் வந்தது. நிமிர்ந்து மேலே பார்த்த சேவல் மரக்கிளையில் குரங்கு ஒன்று உற்சாகமாக ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது. “என்ன? ..... பாட்டு பலமாயிருக்கு ஏதும் விசேஷமா?” என்று குரங்கு கேட்டது. சேவலுக்கு வெட்கமாகப் போய்விட்டது.

“ஒண்ணுமில்லே. பறவைகளுக்கான பாட்டுப்போட்டி காட்டிலே நாளைக்கு நடக்குதில்லே. அதுல கலந்துக்கத்தான். அதான் பாடிப் பயிற்சி எடுக்கிறேன்..!” என்று சேவல் பதில் சொன்னது. “ஆகா..... கதை அப்படிப் போகுதா! நல்லாத்தான் பாடுறே. நாளைக்குப் போட்டியிலே நீயும் பாடு; வெற்றி பெற வாழ்த்துக்கள்!” ....... என்ற படி அடுத்த கிளைக்குத் தாவியது குரங்கு, “ரொம்ப நன்றியண்ணா.....!’

மறுநாள் போட்டி ஆரம்பமானது. மொத்தக்காடுமே ஒன்று கூடிவிட்டது. போட்டியில் கலந்து கொள்ள வந்த பறவைகள் மேடையருகே வரிசையாக நின்றன. போட்டியாளர் ஒவ்வொருவரின் பெயரையும் ஆந்தை மாமா பதிவு செய்தார். மேடைக்குப் பறந்து வந்த குருவி ஒலிபெருக்கி முன்னே நின்றது.

குருவி : “அன்பு நண்பர்களே! இப்பொழுது நம் காட்டில் அனைத்துப் பறவைகளுக்கான பாட்டுப்போட்டி நடைபெற இருக்கிறது. இதில் இசை கூட்டி நன்றாகவும் அதிக நேரமெடுத்தும் பாட வேண்டும்; இங்கு கூடியிருக்கும் அனைவரும் இரசிக்கும் படியாகவும் இருக்க வேண்டும். அத்தகைய பாடலை யார் பாடுகிறாரோ அவரே போட்டியில் வெற்றி பெற்றவர் ஆவார். அவருக்கே பரிசு வழங்கப்படும். போட்டியாளர்களே, நீங்கள் தயார் தானே?’

போட்டியாளர்கள் : “நாங்கள் தயார்....!’

குருவி : போட்டி ஆரம்பமாகிறது. “இந்தப் போட்டிக்கு நடுவராக இருந்து, நல்ல தீர்ப்பினை வழங்கிட உலகமே வியக்கும் நாட்டியப்பேரொளி, நவரசநாயகி மயிலக்காவை நம் அனைவரின் சார்பாக மேடைக்கு வர அன்போடு அழைக்கிறேன்...!”

( குருவி சொன்னதும் ஒய்யாரமாகத் தோகை விரித்தபடி மேடையேறி அமர்ந்தது நடுவர் மயிலக்கா. )

நடுவர் மயில் : முதலில் பாட மைனாவை அழைக்கிறேன்.

மைனா : "க்யோ! க்கியோ .... கியோ ..... க்கியோ ......"
ஐயோ ஐந்து நிமிடந்தான் பாடினேன்.
அதற்குள் எனக்குத் தொண்டை கட்டிவிட்டது.

நடுவர் மயில் : பரவாயில்லை. "நீங்க நல்லாப் பாடினீங்க. போதும்!" அடுத்த போட்டியாளராக நம்மிடையே பண்ணிசைத்துப் பாட வருகிறார் பாடித்திரியும் பச்சைக்கிளியார்.

பச்சைக்கிளி : "கீ.... கீ .... கீ .... கிக்கீ ...... கிக்கீ" என்று இடைவிடாமல் தலையை நீட்டி நீட்டிப் பாடியது. பாடலின் இனிமையால் மகிழ்ந்த விலங்குகள் எழுந்து ஆட்டம் போட்டன. விசில் சத்தம் விண்ணைத் தொட்டது. இப்படி பத்து நிமிடங்களே பாடிய கிளிக்கு மூச்சு முட்டியதால் பாட்டை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கி வந்தது.

நடுவர் மயில் : பாடித்திரியும் பச்சைக்கிளியார் தன் பாடல்களால் நம்மையெல்லாம் பரவசப்படுத்தினார். "நமது அடுத்த போட்டியாளர் அண்ணன் சேவல் அவர்களை மேடைக்கு வர வேண்டுகிறேன்".
அறிவிப்பு வந்ததும், பக்கத்தில் நின்றிருந்த குரங்கைப் பார்த்தபடியே, மேடைக்கு வந்தது சேவல்.

சேவல் : "கொக் .... கொக் .... கொக்கரக்கோ .... கோ...." சேவலின் கூவலைக்கேட்ட நல்ல உறக்கத்திலிருந்த ஒன்றிரண்டு கரடிகளும் திடுக்கென விழித்துக் கொண்டன. சேவலைப் பார்த்து, "தூங்குகிறவர்களை எழுப்புறதே உம் பொழப்பா போச்சு. மிக அருமையான பாட்டு. போதும்ப்பா, நிப்பாட்டு...!" என்று மற்ற பறவைகளும் கத்தவே சேவல் வெட்கத்தோடு மேடையை விட்டு இறங்கிச் சென்றது.

நடுவர் மயில் : நான் இப்பொழுது அடுத்த போட்டியாளர் கழுகார் அவர்களை மேடைக்கு அழைக்கிறேன்.

கழுகு : படபடவென தனது நீண்ட சிறகுகளை அடித்துக் கொண்டு கம்பீரமாக மேடைக்கு வந்த கழுகு "க்ராச் .... க்கிராச் ....கக்ராச்ச்க்" என்று இராகம் போட்டு இழுத்தது.

"என்னாச்சு கழுகண்ணே? இன்னும் பாடு, பாடு. என்று கூட்டத்திலே ஒரே கூச்சல். அடப்போங்கப்பா இம்புட்டுத் தான் என் பாட்டு ...!" என்று சிரித்தபடியே

காடெங்கிலும் எதிரொலித்தது பாட்டு. மான்குட்டிகள் பயந்து அங்குமிங்கும் ஓடின. இதைப் பார்த்துச் சிரித்த யானையின் கண்கள் நீரைச் சொறிந்தன.

நடுவர் மயில் : "இப்பப் பாட வருகிறார் கொக்கு...!". குதித்தும் ஆடியும், பாடியும் நம்மையெல்லாம் மெய்சிலிர்க்கச் செய்யப் போகிறார்.

கொக்கு : பலத்த கைதட்டல் ஓசையுடன், மேடையேறிய கொக்கு இங்கும் அங்கும் ஆடியபடி "கர் ... க்கர் .... க்கர் ..." என்று பாடியபடியே பறந்து போனது.

நடுவர் மயில் : அடுத்தபடியாக வானகத்தின் கானம்பாடி நெஞ்சை அள்ளும் இனியகுரல் படைத்த குயிலார் தன் இன்னிசையால் நம்மையெல்லாம் பாடி மகிழ்விக்க வருகிறார்.

குயில் : அறிவிப்பைத் தொடர்ந்து குயில் மேடையேறினார். எங்கும் கைதட்டல். கூடியிருந்த எல்லா விலங்குகளும் எழுந்து நின்று கைகளைத் தட்டின. நிறைய விலங்குகள் குயிலுக்கு இரசிகர்களாயிருந்தன. ஒவ்வொன்றாக எழுந்து சென்று குயில் குமாரிக்குப் பூங்கொத்துகளைக் கொடுத்து வாழ்த்துச் சொல்லின. குயிலுக்கு ரொம்பவும் பெருமை. குதித்துக் குதித்து மேடையேறியது.

"குக்கூ.... கூ .. கூக்கூ குக்கூ ... கூ கூ" என்று தொடர்ந்து பத்துப் பதினைந்து நிமிடங்கள் இனிய கானத்தால் ரசிகர்களை மகிழ்வித்தது. குயிலின் பாட்டிற்கு மொத்த கூட்டமும் எழுந்து ஆடியது. குயிலுக்கு மூச்சுத் திணறவே பாடலை நிறுத்திவிட்டு மேடையிலிருந்து குயில் இறங்கி வந்தது. "இன்னும் கொஞ்சநேரம் பாடு .... குயிலு!" என்று கூட்டத்திலிருந்து இரசிகர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

நடுவர் மயில் : நமது இசையரங்கம் மிக அற்புதமாக களைகட்டி நெஞ்சை அள்ளும் இசையால் இன்பம் விளைவித்துக் கொண்டிருக்கிறது.

ரசிகப்பெருமக்களின் கைத்தட்டலாலும், ஆரவாரத்தாலும் போட்டியாளர்கள் அற்புதமான இசையினை வழங்கி நம்மையெல்லாம் மகிழ்வித்தனர்.

"இந்த இசைவிழாவின் இறுதிப் போட்டியாளராக காக்கா அவர்களைப் பாட மேடைக்கு அழைக்கிறேன்". மொத்தக் கூட்டமும் அமைதியானது.

மரங்கொத்தி : "ஆமாம்! பெரிசாப் பாட வந்திடுச்சு! நீயெல்லாம் பாட வந்துவிட்டாய். உன்னையெல்லாம் பாடலேன்னு யாரு கேட்டா?"

காக்கா : இவர்களின் கேலிப் பேச்சுகள் எதையும் கேட்டுத்தயங்கி நிற்காமல் துணிச்சலாய் மேடை ஏறியது. ஒரே கூச்சல்."நீ நல்லாவே பாடுவே. போதுமடா ..... சாமி .....!" என்று சில மிருகங்கள் கத்தின. நடுவர் மயிலக்கா, அனைவரையும் அமைதியாக இருக்க கேட்டுக் கொண்டது.

மெல்லிய குரலில் காக்கா பாட ஆரம்பித்தது.

கரகரத்த காக்கையின் குரல் சீராய் ஒலித்ததால் பாடவிடாமல் தடுத்த விலங்குகள், ஆச்சரியத்தோடு கவனித்தன.

"கக்க காக்க காக்க கக்கா கா...! கா...! கா...! " என்று ஓர் எழுத்தைக் கொண்டே புதுப்புது இராக ஆலாபனைகள். சுருதி கூட்டிப் பாடிக் கொண்டே இருந்தது. "ஏம்ப்பா காக்கா, நல்லாத்தானே பாடுது...! என்றன சில விலங்குகள். கேலி செய்த பறவைகளுக்கு என்னவோ போலாகி விட்டது. சற்றுநேரம் கழித்து அவை அனைத்தும் எழுந்து, பாட்டிற்கு ஏற்ப ஆட்டம் போட ஆரம்பித்தன. புலி புனிதா, "பிரமாதம்" என்றது. "ஆகா.......! என்ன சுருதி சுத்தம். அற்புதம் ......!" என்று தலையாட்டி இரசித்தது சிங்கராஜா.

"கா... கா ... கக்கக்கா ... கா.. ககா... ககா....கா! கா!" என்று தன் பாட்டை குரலை ஏற்றி இறக்கி தடுமாற்றம் எதுவுமின்றி நீண்ட நேரம் காகம் தொடர்ந்து பாடியது கண்டு மொத்தக் கூட்டமும் கைதட்டிப் பாராட்டின.

சரியாய் அரைமணி நேரத்திற்கு மேல், காக்காவின் பாட்டு மழை பொழிந்தது. இப்படி ஒரு பாட்டை காட்டில் எந்த ஒரு விலங்குமே கேட்டதில்லை. புலி எழுந்து வந்து, காக்காவைக் கட்டிப் பிடித்துப் பாராட்டியது.

போட்டி நிறைவு பெற்றது. பாட்டுப்போட்டிக்கான தீர்ப்பை அறிவிக்க மேடையிலிருந்த ஒலிப்பெருக்கி முன் நடுவர் மயிலக்கா வந்தது. கூட்டம் நிசப்தமானது. நடுவர் தன் தீர்ப்பினை வழங்கினார்.

நடுவர் மயில் : "இங்க பாருங்க, காக்கா பாட வந்த போது எல்லோரும் கேலி செஞ்சீங்க. பெரிசா பாட வந்திட்ட, நீயெல்லாம் பாடலேன்னு யாரு கேட்டா...?" என்றெல்லாம் மிகவும் வெறுப்புடன் காகம் பாடுவதையே வேண்டாமெனத் தடை செய்தீர்கள். ஆனாலும் காக்கா யாருடைய கேலிப் பேச்சையும் நையாண்டியையும், போட்ட கூச்சலையும் பொருட்படுத்தாமல் மேடையேறி துணிச்சலுடன் தயக்கம் ஏதுமின்றி பாட ஆரம்பித்தது. நிறையப் பயிற்சி எடுத்துப் புதுப்புது இராகத்தில் பாடியிருக்கு. அதுவும் நீங்க எல்லோருமே கை தட்டி பாராட்டுற அளவுக்கு அரைமணி நேரத்திற்கும் மேலாக பாடியிருக்கு.

யாருடைய குரலுக்கும் ஈர்ப்பு ஒன்னு இருக்கு. அதே போல் ஒவ்வொரு குரலுக்குள்ளும் அழகுமிருக்கு. காக்கா குரலோட சிறப்பு இன்னிக்குத்தான் நமக்கு தெரிஞ்சிருக்கு. கடுமையான முயற்சியும் பயிற்சியு-மிருந்தா எல்லோராலும் பாட முடியும்னு இந்தப் போட்டி மூலமா காக்கா நிரூபிச்சுக் காட்டியிருக்கு. தான் பாடியதோடு மற்றவர்களும் இது போல் பாடமுடியும் என்ற தன்னம்பிக்கையை ஊட்டிய காக்காவிற்கே முதற்பரிசினை வழங்குகிறேன். காக்காவிற்கு எனது பாராட்டுக்கள்" என்று மயில் தன் தீர்ப்பை அறிவித்தது.

"ஆகா! நல்ல தீர்ப்பு ...!" மிக நல்ல தீர்ப்பு என்று காட்டின் எல்லா விலங்குகளும் எழுந்திருந்து கைதட்டி ஆமோதித்தன. நடுவர் மயிலக்கா "பாட்டுராணி" பட்டத்தை தலையில் கிரீடமாய்ச் சூட்டியது.

அனைவருக்கும் நன்றி கூறி, மேடையிலிருந்து பறந்து சென்றது பாட்டுராணி காக்கா.

### உரையாடலாம் வாங்க!

- கதையில் நடுவர் மயிலக்கா கூறும் தீர்ப்பு சரியானதா? உம் கருத்தைச் சொந்தநடையில் கூறுக.
- உங்கள் பள்ளியில் நடைபெற்ற பாட்டுப்போட்டி நிகழ்வுகள் குறித்துப் பேசுக.

### சிந்திக்கலாமா?

போட்டியில் வெற்றி பெறுவதைக் காட்டிலும் பங்கேற்பது தான் இன்றியமையாதது என்று உன் தந்தை கூறுகிறார். ஏன் தெரியுமா?

## வினாக்களுக்கு விடையளி

1. காட்டில் நடந்த போட்டியின் பெயர் என்ன?
2. காக்காவின் பாட்டைக் கேட்ட சிங்கராஜா என்ன கூறினார்?
3. "பாட்டுராணி" பட்டம் பெற்ற பறவை எது?

**புதிர்களைப் படிப்போம்! விடை காண்போம்! படத்துடன் பொருத்துவோம்!**

கருப்பு நிறம் உடையவன், கூவி அழைத்தால் வந்திடுவேன், கூட்டம் சேர்த்து வந்திடுவேன். அவன் யார்?



முட்டை இடும் குஞ்சு பொரிக்காது. கூட்டில் குடியிருக்கும், கூடு கட்ட தெரியாது. குரலில் இனிமை உண்டு, சங்கீதம் தெரியாது. அது யார்?



பார்க்க அழகு, பாம்புக்கு எதிரி அவள் யார்?



பச்சை நிற அழகிக்கு உதட்டுச்சாயம் பூசாமலே சிவந்திட்ட வாய். அவள் யார்?



காலையில் ஊதும் சங்கு, கறி சமைக்க உதவும் சங்கு. அது என்ன?



## கலையும் கைவண்ணமும் - காகிதத்தில் நாய் செய்வோம்.



## மீண்டும் மீண்டும் சொல்லலாமா?

- ஒரு குடம் எடுத்து அரைக்குடம் இறைத்துக் குறைகுடம் நிரப்பி நிறைகுடம் ஆக்கினான்.
- துள்ளி எழுந்து பள்ளி சென்றாள் வள்ளி. அவளுடன் மெல்ல மெல்ல வந்து சேர்ந்து கொண்டாள் அல்லி.

## தெரிந்து கொள்வோம்

- ஆண்மயிலுக்குத்தான் தோகை உண்டு.
- ஆண்சிங்கத்துக்குத்தான் பிடரிமயிர் உண்டு.
- மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 முறை கொத்தும்.
- புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கிலோ மீட்டர் வரை பறக்கும் திறன் கொண்டது.
- காகங்களே இல்லாத நாடு நியூசிலாந்து.

## செயல் திட்டம்

எவையேனும் ஐந்து பறவைகளின் படங்களை ஒட்டி, அவற்றைப் பற்றி ஐந்து வரிகள் எழுதி வருக.

# 4 ஆனந்தம் விளையும் பூமியடி



கும்மியடி பெண்ணே கும்மியடி - சுகம்
கோடி விளைந்திடக் கும்மியடி
நமது இன்னல் போனதடி - என்று
நெஞ்சம் நெகிழ்ந்தே கும்மியடி
பாவலர் புகழும் பூமியடி - நம்
பாரதம் என்னும் தேசமடி
ஆனந்தம் விளையும் பூமியடி - புகழ்
ஆரம் கொண்ட தேசமடி
அறிவில் சிறந்த தேசமடி - நல்
அறிஞர்கள் வாழும் பூமியடி
மலையாய் உயர்ந்த தேசமடி - பெரும்
வளமும் கொண்ட பூமியடி
இந்தியா நமது தேசமடி - நீ
இணைந்து ஒன்றாய் வாழ்ந்திடவே
மண்ணைத் தாயாய் போற்றிடடி - உன்
கண்ணைப் போலக் காத்திடடி

## உரையாடலாம் வாங்க!

- நமது நாட்டின் தேசியச் சின்னங்களைக் கூறி கலந்துரையாடுக.
- நமது இந்திய நாட்டின் பெருமைகள், வளங்கள் குறித்து உமது கருத்துகளைப் பகிர்ந்து கொள்க.
- உங்கள் ஊரிலுள்ள சிறப்பு வாய்ந்த இடங்களைப் பற்றி, உமது கருத்துகளை எடுத்துக்கூறுக.

## சிந்திக்கலாமா?

எதனை நாம் தாயாய் போற்றி, கண்ணைப்போல் காக்க வேண்டும்? ஏன்? எவ்வாறு?



## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. 'இன்னல்' - இச்சொல்லின் பொருள் ________

(அ) மகிழ்ச்சி (ஆ) கன்னல்
(இ) துன்பம் (ஈ) இன்பம்

2. 'கும்மியடி' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

(அ) கும்மி + யடி (ஆ) கும் + மியடி
(இ) கும் + மடி (ஈ) கும்மி + அடி

3. 'ஆனந்தம்' - இச்சொல்லின் எதிர்ச்சொல் ________

(அ) மகிழ்ச்சி (ஆ) வருத்தம்
(இ) அன்பு (ஈ) கோபம்

4. 'பாவலர்' - இச்சொல்லின் பொருள் ________

(அ) பாதுகாவலர் (ஆ) மருத்துவர்
(இ) கவிஞர் (ஈ) பெரியவர்

5. ஒரே ஓசையில் முடியாத சொற்கள் ________________________________________

(அ) தேசமடி - பூமியடி (ஆ) போற்றிடடி - காத்திடடி

(இ) கும்மியடி - கோடி (ஈ) போனதடி - போற்றிடவே

6. கும்மியாட்டத்தைக் குறிக்கும் படம் ________________________________________

(அ) 

(ஆ) 

(இ) 

(ஈ) 

## மொழியோடு விளையாடு

படங்களின் பெயரை எழுதுக. பெயரின் முதல் எழுத்துகளில் உருவாகும் சொல்லுக்குரிய படத்துடன் இணைக்க



கடல்



விறகு



தையல் இயந்திரம்



























**கவிதை**

கவிதை என்பது
அழகான வரிகளை
சொல்வது அல்ல
ஆழமான வலிகளை
சொல்வது ஆகும்

கவிதை

## வண்ணத்தில் என் கைவண்ணம்



படத்தில் காட்டியது போல் கை விரல்களில் வண்ணங்களை பூசி வெள்ளைத்தாளில் விருப்பம் போல் கற்பனைத்திறனுடன் வண்ணச் சித்திரங்களை உருவாக்கு.















## பாடலில் இடம்பெற்றுள்ள ஒத்த ஓசைச்சொற்களை எழுதுக.




## பொருத்துக.

1. பாரதம், தேசம் - இன்னல்
2. ஆனந்தம், சந்தோஷம் - அன்னை
3. நெஞ்சம், உள்ளம் - மகிழ்ச்சி
4. துன்பம், துயர் - நாடு
5. தாய், அம்மா - மனம்

### தெரிந்து கொள்வோம்

நாட்டுப்புறக்கலைகள் என்பவை நாட்டுப்புற மக்களின் உணர்ச்சி வெளிப்பாடாகும். இந்த உணர்ச்சிகள் பாடலாகவும், ஆடலாகவும் மக்களிடையே வெளிப்படுகின்றன.

### செயல் திட்டம்

உமது ஊரில் பாடப்படும் நாட்டுப்புறப் பாடல்களைக் கேட்டு, எழுதி வருக.

# 5 கணினி உலகம்

கனிமொழியும், பூங்கொடியும் நெருங்கிய தோழிகள். நான்காம் வகுப்பு படிக்கும் இருவரும் கோடை விடுமுறைக்கு வெளியூருக்குச் சென்றனர். விடுமுறை முடிந்து பள்ளி தொடங்கும் முன் இருவரும் சந்தித்து உரையாடுகின்றனர்.

கனிமொழி : வா! பூங்கொடி, நலமா?

பூங்கொடி : ஓ! நலமாக உள்ளேன். நீ எப்படி இருக்கிறாய்? விடுமுறையை எப்படிக் கழித்தாய்? எங்கேயும் வெளியூர் சென்றாயா?

கனிமொழி : ஆமாம்! சென்னையிலுள்ள எங்கள் தாத்தா வீட்டிற்குச் சென்றேன்.

பூங்கொடி : அப்படியா! சென்னை தமிழ்நாட்டின் தலைநகரமாச்சே. அங்கு சுற்றிப் பார்ப்பதற்கு நிறைய இடங்கள் இருக்கிறதே. நீ கண்டுகளித்த இடங்களைப் பற்றி விளக்கமாகச் சொல்கிறாயா?

கனிமொழி : சென்னை ஒன்றும் நம் ஊரைப்போல் சிறியதன்று. மிக உயரமான அடுக்குமாடி கட்டிடங்கள், அகலமான மிகப் பெரிய சாலைகள், நெருக்கடியான போக்குவரத்து மெரினா கடற்கரை, பன்னாட்டு விமானநிலையம், இரயில் நிலையங்கள், மிகப்பெரிய அண்ணா நூற்றாண்டு நூலகம், பொழுதுபோக்கு மையங்கள், மிருகக்காட்சி சாலை, எழும்பூர் அரசு அருங்காட்சியகம், வண்டலூர் பூங்கா, பொழுதுபோக்கு மையங்கள், தகவல் தொழில் நுட்பப்பூங்கா என எல்லாம் 'புதுமையிலும் புதுமை' ஆக இருந்தன.

பூங்கொடி : பூங்கான்னா! மரம், செடி, கொடிகள் தானே இருக்கும். அது என்ன தொழில்நுட்பப்பூங்கா? அதை நீ எங்கு பார்த்தாய்?

கனிமொழி : உள்ளூர் முதல் உலகநாடுகள் வரை எத்தனையோ பேருக்கு வேலைவாய்ப்பு உறுதியாக இடம் கொடுத்தவர்கள்...!!!

இந்த வளாகத்தில் நிறைய கட்டிடங்கள், அதில் நிறைய தளங்கள் உண்டு. வெவ்வேறு நிறுவனங்கள், வெவ்வேறு மனிதர்கள் ....... பல்வேறு பணிகள், பொதுவாக கணினியில் வேலை கணிசமான ஊதியம். ஒரே பெயர் ஐ.டி. ஊழியர்கள். அங்கே கணினி தகவல் தொழில் நுட்ப செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பூங்கொடி : கணினி தகவல் தொழில் நுட்பமா? இப்போது எங்கு பார்த்தாலும் கணினியைப் பற்றித்தான் பேசுகிறார்கள்.

கனிமொழி : கணினி ஒரு மின்னணு சாதனமாகும். இது இயந்திர மொழியை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது. நாம் தரும் உள்ளீடுகளைப் (Input) பெற்று அதனைச் செயல்படுத்தி அதற்கேற்ற வெளியீடுகளைத் (Output) தரும். இதனைச் சார்லஸ் பாபேஜ் (CHARLES BABAGE ) என்பவர் கண்டுபிடித்தார். முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்ட கணினி அளவில் மிகப் பெரியது. அதனை எளிதாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்ல இயலாது. ஆனால், இப்போதோ கையடக்க வடிவிலே கூடக் கணினிகள் உருவாக்கப்படுகின்றன. கணினியைப் பற்றி மேலும் விபரமாக என் மாமா மோகனைக் கேட்கலாம்.

அவர் சென்னையில் தரமணி ராஜீவ்காந்தி சாலையில் அந்தத் தொழில்நுட்பப்பூங்காவில் தான் வேலை செய்கிறார். நேற்று தான் அங்கிருந்து விடுப்பில் வந்துள்ளார்.



பூங்கொடி : வணக்கம். எங்களுக்குக் கணினியின் முதன்மையான பகுதிகள் எவையென்று சொல்லுங்கள்.

மோகன் : கணினி என்பது பல பாகங்கள் இணைந்து பணிபுரியும் ஒரு அமைப்பு. மையச்செயல்பாட்டுப்பகுதி (CPU), கட்டுப் பாட்டகம் (Control Unit), நினைவகம் (Memory), உள்ளீடு, மற்றும் வெளியீடு (Input and Output ) இவைகள் தான் ஒரு கணினியின் முதன்மைப்பகுதிகள் ஆகும்.

கனிமொழி : மாமா, முதன்மைப் பகுதிகளைப் பற்றி சற்று விரிவாகச் சொல்லுங்கள்.

மோகன் : சொல்கிறேன். இவற்றில் மிக முக்கியமானது மையச் செயலகம் அல்லது நுண்செயலி என்பது செய்நிரல் அடிப்படையில் கணிதச் செயல்பாடுகளை அமைக்கும். கட்டுப்பாட்டகம் என்பது செய்திகளைத் திரளாகச் சேமித்து வைத்திருக்கும். செய்திகள் / தகவல்களை நிலையாகச் சேமித்து வைக்குமிடம் தான் நினைவகம். மையச்செயலகம் ஒருங்கிணைந்த உள்ளீடு, வெளியீடு கருவிகளைத் தன்னுள் பெற்றிருக்கும்.

பூங்கொடி : கணினியின் அமைப்பைப் பற்றித் தெளிவாகக் கூறினீர்கள். அதன் செயல்பாடுகள் பற்றியும் சொல்லுங்கள்.

மோகன் : சொல்வதைக் காட்டிலும் உங்கள் முன் கணினியை இயக்கிக் காட்டுகிறேன். அது இன்னும் எளிதாகப் புரியும்.

( தோழிகள் இருவரும் ஆவலோடு கேட்கத் தொடங்கினர். )

இது தான் விசைப்பலகை (Keyboard), சுட்டி (Mouse) இவை உள்ளீட்டுக்கருவிகள் (Input Devices). திரையகம் அல்லது காட்சித்திரை (Monitor), அச்சுப்பொறி (Printer) போன்றவை வெளியீட்டுக்கருவிகள் (Output Devices).



கனிமொழி : தரவு (Data) பதிவேற்றம் (Upload), பதிவிறக்கம் (Download) என்கிறீர்களே, அப்படி என்றால் என்ன?

மோகன் : கவனமாகக் கேளுங்கள். நாம் கணினிக்குக் கொடுக்கும் தகவல் தான் தரவுகள் (Datas). தகவல்கள் பதிவு செய்வதைப் பதிவேற்றம் (Upload) எனவும், தகவல் பெறுவதைப் பதிவிறக்கம் (Download) எனவும் அழைக்கிறோம். கணினிகளின் தொடர்ச்சியான வலை அமைப்புகள் சேர்ந்திருக்கும் இணைப்பே வலைதளம் (Website). உலகம் முழுமைக்கான இந்த வலையமைப்பே இணையம் (Internet) ஆகும். இணையம் என்பது உலகெங்கும் உள்ள கணினிகளை இணைக்கும் ஒரு பிணையம் (Network). இணைய வசதி இருந்தால் உலகமெங்கும் எந்தவொரு நாட்டு நிகழ்வுகளையும் நாம் நேரடியாகக் காணமுடியும்.

பூங்கொடி : ஆச்சரியமாகவுள்ளது. இணையம் மூலம் கடிதம் கூட எழுதலாம் என்கிறார்களே! அது எப்படி முடியும்?

மோகன் : மின்னஞ்சல் (Email ID)

முகநூல் (Face Book )

சுட்டுரை (Twitter)

புலனம் (Whatsapp)

கணினிகளுக்கு இடையே இணையத்தின் வாயிலாகச் செய்யப்படும் தகவல் பரிமாற்றமே மின்னஞ்சல். இதன் மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளலாம்.

முகநூலில் கட்டுரை, புலனம் போன்றவற்றை செயலி உருவாக்கம் (Play store) சென்று, நம் மின்னஞ்சல் முகவரி கொடுத்து உருவாக்கி நம் கருத்துகளை பதிவிடலாம் அல்லது பெறலாம்.

கனிமொழி : மிக்க நன்றி! மாமா, கணினியை எங்களுக்கு நன்கு அறிமுகப்படுத்தினீர்கள். எங்கள் தோழிகளுடன் இது பற்றிய விபரங்களை எடுத்துச் செல்வோம். இவற்றிற் கென்று தனி அரங்கம் உள்ளதா?

மோகன் : ஆம்! சென்னையில் தரமணி ராஜீவ்காந்தி சாலையில் தொழில்நுட்பப் பூங்கா உள்ளது. பதின்மூன்று அடுக்கு மாடிகளுடன் கட்டப்பட்டு 2000 - ஆம் ஆண்டிலிருந்து கணினி தகவல் தொழில் நுட்பச் செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பூங்கொடி : கனிமொழி உனக்குச் செய்தி தெரியுமா? நம் பள்ளியில் கூட கையடக்கக் கணினியைப் பயன்படுத்தப் போகிறார் களாம். அதனால் நாமும் கற்றல் திறனை வளர்த்துக் கொள்வோம்.

**திறன் : சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறனும்**

**உரையாடலாம் வாங்க!**



கணினியின் திரை போன்று செய்து கணினியைப் பற்றிப்பேசுக.

**சிந்திக்கலாமா?**



சூழல் 1 :

அழகன் புத்தகத்தில் மட்டுமே படிக்க முடியும் என்கிறான்.

சூழல் 2 :

அவன் நண்பனோ கணினியிலும் படிக்கலாம் என்கிறான்.

இது பற்றி உங்கள் கருத்து என்ன?

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. சார்லஸ் பாபேஜ் கண்டறிந்த அறிவியல் கருவி ____________________________

(அ) தொலைக்காட்சி (ஆ) கணினி

(இ) கைப்பேசி (ஈ) மடிக்கணினி

2. ‘விசைப்பலகை’ - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது______________

(அ) விசைப் + பலகை (ஆ) விசை + பலகை

(இ) விசைப்ப + பலகை (ஈ) விசைப்பல + கை

3. ‘நினைவகம்’ - இச்சொல்லைப் பிரித்து எழுதும் முறை ____________________

(அ) நினை + வகம் (ஆ) நினை + அகம்

(இ) நினைவு + வகம் (ஈ) நினைவு + அகம்

4. ‘மின் + அஞ்சல்’ - இச்சொல்லைச் சேர்க்கக் கிடைப்பது ________________

(அ) மின்அஞ்சல் (ஆ) மின்னஞ்சல்

(இ) மினஅஞ்சல் (ஈ) மினஞ்சல்

5. ‘பதிவேற்றம்’ என்ற சொல்லின் பொருள் ________________________________

(அ) தகவல் ஆராய்தல் (ஆ) தகவல் வரிசைப்படுத்துதல்

(இ) தகவல் பதிவுசெய்தல் (ஈ) தகவல் பெறுதல்

## வினாக்களுக்கு விடையளி

1. சென்னையில் கனிமொழி கண்டுகளித்த இடங்கள் யாவை?

2. கணினியின் முதன்மைப் பகுதிகளை எழுதுக.

3. இணையம் என்றால் என்ன?

4. மின்னஞ்சல் எதற்குப் பயன்படுகிறது?

### குறிப்புகளைப் படித்துச் சொற்களைத் தேர்ந்தெடுப்போமா?

காட்சிகளைக் காண்பது

செய்திகளின் வேறுபெயர்

படங்களுடன் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வது

கணினி தொடர்ச்சியான வலை அமைப்பு

தகவல்களைப் பதிவு செய்தல்





## தமிழோடு விளையாடலாம்

கை என்னும் சொல்லை முதலெழுத்தாகக் கொண்டு பல சொற்களை உருவாக்கலாமா?







கைக்குட்டை ____________________   ____________________   ____________________

## செயல் திட்டம்

- கணினியில் படம் வரைந்து வண்ணம் தீட்டுக.
- நாளிதழ், வார இதழ்களில் வெளியாகும் கணினி பற்றிய செய்திகளைப் படங்களுடன் உன் குறிப்பேட்டில் ஒட்டி மகிழ்க.

**கணினி சம்பந்தப்பட்ட ஆங்கிலச்சொற்களுடன் பொருத்துங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 1. சுட்டி | - | Whatsapp | 1. ____________________________ |
| 2. காட்சித்திரை | - | Mouse | 2. ____________________________ |
| 3. அச்சுப்பொறி | - | Key board | 3. ____________________________ |
| 4. விசைப்பலகை | - | Monitor | 4. ____________________________ |
| 5. புலனம் | - | Printer | 5. ____________________________ |

## கண்டுபிடிக்கலாம் வாங்க..






- குழந்தைகளை ஆறு பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு செய்தித்தாளைக் கொடுக்கவும்.
- நிறுத்தற்குறிகள் அமைந்த சொற்றொடர்களை அடிக்கோடிடச் சொல்லவும்.
- குறிப்பிட்ட நேரத்தில் அதிகமான, சரியான சொற்றொடர்களை அடிக்கோடிட்ட குழுவினரைப் பாராட்டவும்.

**ஓர் எழுத்தை நீக்கியோ அல்லது சேர்த்தோ படத்திற்குரிய சொற்றொடரை உருவாக்குக.**



பட்டம்

எடுத்துக்காட்டு.
சுவரை அலங்கரிக்க படம் மாட்டு.





ரதி
(அழகின் தேவதை)





கொடுக்கு



**விடுபட்ட இடங்களில் உரிய சொற்களை நிரப்பிக் கடிதத்தை முழுமையாக்குவோம்.**

.........................

.........................

அன்புள்ள ......................

நாங்கள் அனைவரும் ....................................
அதுபோல ......................................... அனைவரின்
............................................ அறிய ஆவல்.

அடுத்த வாரம் ................................ ஊரில்
.......................................... கண்காட்சி நடைபெற
................................ அதில் பல்வேறு ..................
காட்சிக்கு வைக்கப்படும். ...............................
வளர்ச்சிக்குத் ............................... பல்வேறு
நூல்களை ஒரே ........................... கண்டு
மகிழலாம். ........................யில் கலந்து கொள்ள
......................... அனுப்பினால் நாங்கள்
................... சேர்ந்து ............................ பார்த்து
மகிழ்வோம். பல ............................ வாங்கிப்
.................................... பயன் பெறுவோம்.
எனவே ......................................யும் அனுப்பி
வைக்குமாறு .................. வேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள,

...............................

---

உள்நாட்டு அஞ்சல் அட்டை




பெறுநர் முகவரி

______________________

______________________

______________________

அஞ்சல் குறியீட்டு எண் ☐☐☐☐☐☐

இரண்டாவது மடிப்பு

அனுப்புநர் முகவரி

______________________

______________________

அஞ்சல் குறியீட்டு எண் ☐☐☐☐☐☐

# 6 மலையும் எதிரொலியும்



சிறுவன் கோபிநாத் தன் தாத்தாவுடன் பக்கத்து ஊரில் நடக்கும் திருவிழாவிற்குச் சென்றான். அவ்வழியில் இருந்த மலைப்பகுதியைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது கல் தடுக்கி கீழே விழுந்து விட்டான். கால்முட்டியில் அடிபட்டு வலித்ததால் “ஆ ஆ ஆ ஆ ஆ!!!” என்று அலறினான். என்ன ஆச்சரியம்! அவன் வலியால் துடித்து அலறிய சத்தம் அவனுக்கே திரும்பக் கேட்டது. “ஆ ஆ ஆ ஆ ஆ!!!”

அவன் திரும்பக் கத்தினான். யார் நீ? என் வேதனை உனக்கு வேடிக்கையாக இருக்கிறதா? உடனே எதிரிலிருந்த மலையிலிருந்து யார் நீ? என் வேதனை உனக்கு வேடிக்கையாக இருக்கிறதா? என்று பதில் வந்தது. இதைக் கேட்டதும் சிறுவன் கோபிநாத்திற்கு கோபம் வந்தது. தாத்தா என்ன நடக்கிறது இங்கு? என்னை யாரோ கேலி செய்வது போல் இருக்கிறது.

சிரித்துக் கொண்டே அவனுடைய தாத்தா, “கோபி இதைக் கவனமாகக் கேள்”. இப்பொழுது அவர் மலையைப் பார்த்து, “கோபி! நீ ரொம்ப நல்லவன், என் நண்பன்,” என்று சத்தமாகச் சொன்னார்.

“கோபி! நீ ரொம்ப நல்லவன் என் நண்பன்” என்று திரும்பச் சொன்னது. இதைக் கேட்ட சிறுவன் கோபிநாத்திற்கு மிகவும் வியப்பாக இருந்தது.

"இது எப்படி சாத்தியம்? ஒன்றும் புரியவில்லையே. தாத்தா சொன்னவை அப்படியே ஒன்றுவிடாமல் திரும்ப கேட்கிறதே." "தாத்தா, இது என்ன மாயம்?"

"கோபி! இது ஒன்றும் மாய மந்திரமில்லை. இதை எல்லோரும் எதிரொலி என்று கூறுவர். ஆனால் வாழ்க்கைக்கான தத்துவம் இதில் இருக்கிறது. நாம் என்ன தருகிறோமோ! அதை அப்படியே நமக்குத் திரும்பத் தரும். நம்முடைய வாழ்க்கை நம்முடைய செயல்பாட்டின் எதிரொலி தான். அடுத்தவர் உன் மீது அன்பு செலுத்த வேண்டும் என்று நீ விரும்பினால் நீயும் அவர் மீது அன்பு செலுத்த வேண்டும். அதுபோல் மரியாதை என்பது கேட்டுப் பெறுவதல்ல; அது கொடுத்துப் பெறுவது.

நாம் எதைக் கொடுக்கிறோமோ, அதையே வாழ்க்கையும் நமக்குத் திருப்பிக் கொடுக்கிறது. மற்றவர்களிடம் அதிகமான திறமையை நாம் எதிர்பார்த்தால், முதலில் நம்முடைய திறமையை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

உன் வாழ்க்கையில் எதிர்பாராமல் நடக்கும் ஒவ்வொன்றும் உன்னுடைய எதிரொலி தான் என்று சொல்லி முடித்தார் தாத்தா.

**உரையாடலாம் வாங்க!**



மலைப்பகுதிக்குச் சென்றிருக்கிறீர்களா? உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பேசுக.

## வினாக்களுக்கு விடையளி

1. கோபிநாத் தாத்தாவுடன் எங்கு சென்று கொண்டிருந்தான்?
2. கோபிநாத் பேசிய போது மலை என்ன செய்தது?
3. கோபிநாத் "நான் அன்பு கொண்டவன்" என்று சொல்லியிருந்தால் மலை என்ன சொல்லி இருக்கும்?
4. இக்கதையின் மூலம் தாத்தா கோபிநாத்துக்குக் கூறிய அறிவுரை யாது?

## கலையும் கைவண்ணமும்

### வண்ணம் தீட்டி மகிழ்வோம்



விடுகதைக்குரிய சரியான படத்தைத் தேர்ந்தெடுப்போமா?

1. எனக்கே இறக்கைகள் உண்டு. வானத்தில் பறப்பேன். ஆனாலும் உயிர் இல்லை. நான் யார்?






2. நீரில் இருப்பேன். நிலத்திலும் இருப்பேன். வால் இல்லை. கொடுக்கு உண்டு எனக்கு. நான் யார்?





3. என் உடலுறுப்புகளில் ஒன்று இது. ஈ, கொசு விரட்ட உதவும். மனிதனுக்கு இல்லாத உறுப்பு. உடலின் பின்பகுதியில் இருக்கும். அது என்ன?





4. உணவு வகையை சேர்ந்தவன் நான். நீராவியிலேயே தயாராவேன். என் சிக்கலை எடுக்கவே முடியாது. நான் இடியாக இருந்தாலும் இனிமையாக உண்ணலாம். நான் யார்?





5. தரையிலே ஊர்ந்திடுவேன். வானத்திலே பறந்திடுவேன். கடலைத் தாண்டிடுவேன். மக்களைச் சுமந்து செல்வேன். நான் யார்?








## தமிழோடு விளையாடலாம்

### குறிப்புகளைப் படி. விடையைக் கண்டுபிடி



1. செய்தி
2. இது இல்லாத வீட்டில் எதுவும் நுழையலாம்



1. நீதி மன்றத்தில் தொடர்வது
2. சிறிய குழந்தைகளின் பேச்சு



1. கடவுளைக் குறிக்கும் சொல்
2. சிறிய மலை



1. சிலை வடிப்பவர்
2. கோபம்

## தெரிந்து கொள்வோம்

1. உலகின் மிக உயரமான சிகரம் - இமயமலையில் உள்ள எவரெஸ்ட்
2. தமிழ்நாட்டின் மிக உயரமான சிகரம் - ஆனைமலையிலுள்ள ஆனைமுடி

## செயல் திட்டம்

- உனக்குப் பிடித்த செல்லப் பிராணி எது? அதனிடம் நீ எவ்வாறு நடந்து கொள்வாய்? எழுதி வருக.

# எழுவாய், பயனிலை அறிவோமா?

## எழுவாய் :

எழுத்துகள் பல தொடர்ந்து வருவது சொல். சொற்கள் பல தொடர்ந்து வந்து ஒரு பொருளைக் கூறுவது வாக்கியம். வாக்கியத்தில் கருத்து தொடங்கும் சொல் எழுவாயாகும்.

( எ.கா. ) சாரதா இராமாயணம் படித்தாள்

மல்லிகை மணம் வீசியது

முதலில் வரும் சாரதா என்ற சொல்லே எழுவாய் எனப்படும்.

யார்? எது? எவை? எவர்? எவன்? எவள்? என்ற கேள்விக்கு விடையாக வருபவையே எழுவாய் எனப்படும்.

யார் படித்தாள்? என்ற கேள்விக்கு, சாரதா என விடையாக வருவதே எழுவாய். எழுவாய் என்பது ஒரு செயலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பதாகும். பெரும்பாலும் எழுவாய் முதலிலேயே வரும்.

## பயனிலை :

வாக்கியத்தின் கருத்தை முடிக்கும் சொல் பயனிலையாகும்.

பயனிலை என்பது செயலைக் ( வினையை ) குறிப்பதாகும்.

பயனிலைச் சொல் பெரும்பாலும் வாக்கியத்தின் இறுதியில் வரும். மிகச் சில இடங்களில் மாறியும் வரும்.

( எ.கா.) மல்லிகை மணம் வீசியது.

இதில் "வீசியது" என்பது செயல். இதனால் வீசியது பயனிலை ஆகும்.

## பயனிலையின் வகைகள் :

பயனிலை

- பெயர்ப் பயனிலை
- வினைப் பயனிலை
- வினாப் பயனிலை

**பெயர்ப்பயனிலை :**

✓ அவன் பீட்டர்.

இத்தொடரில் அவன் என்பது எழுவாய், பீட்டர் என்பது பெயர்ப் பயனிலை.

**வினைப்பயனிலை :**

✓ எமிலி ஆடினாள்.

இத்தொடரில் எமிலி என்பது எழுவாய், ஆடினாள் என்பது வினைப் பயனிலை.

**வினாப்பயனிலை :**

✓ நீ யார்?

இத்தொடரில் நீ என்பது எழுவாய். யார் என்பது வினாப்பயனிலை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பெயர் | + | பெயர் | → | பெயர்ப்பயனிலை | காயத்ரி நல்லவள் |
| பெயர் | + | வினை | → | வினைப்பயனிலை | ஆதவன் சென்றான் |
| பெயர் | + | வினா | → | வினாப்பயனிலை | எமிலி யார்? |

## தெரிந்து கொள்வோம்

- பெயர்ச்சொல் என்பதே எழுவாயாக வரும்.
- வினைச்சொல் என்பதே பயனிலையாக வரும்.
- பெயரைக் கொண்டு முடிவது, பெயர்ப்பயனிலை.
- வினையைக் கொண்டு முடிவது, வினைப்பயனிலை.
- வினாவைக் கொண்டு முடிவது, வினாப்பயனிலை.
- ஒரு தொடரின் பயனிலைக் கொண்டே எழுவாயை அறியலாம்.
- எழுவாயும் பயனிலையும் திணை, பால், எண், இடங்களோடு இயைந்து வரும்.

**கீழ்க்காணும் தொடர்களில் எழுவாயைக் கண்டறிந்து வட்டமிடுக.**

1. குழந்தை சிரித்தது
2. கண்ணன் படம் வரைந்தான்
3. பூங்கோதை பள்ளி சென்றாள்
4. அண்ணன் தம்பிக்கு உதவினான்
5. பறவைகள் வானில் பறந்தன
6. பசு புல் மேய்ந்தது.

**கீழ்க்காணும் தொடர்களைப் பயனிலைகளுக்கேற்றவாறு அட்டவணைப்படுத்துக.**

1. அவர் சிறந்த மருத்துவர்
2. என்னை அழைத்தவர் யார்?
3. அருளரசன் நல்ல மாணவன்.
4. நேற்று அழகன் ஊருக்குச் சென்றான்.
5. முக்கனிகள் யாவை?
6. புலி உறுமியது

| வ.எண். | பெயர்ப் பயனிலை | வினைப் பயனிலை | வினாப் பயனிலை |
|---|---|---|---|
| 1. | அவர் சிறந்த மருத்துவர் | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |



## தெரிந்து கொள்வோம்

ஒவ்வொரு வீட்டைச் சுற்றியும் பத்து வகை மரங்கள் இருத்தல் வேண்டும் என்று பெரியவர்கள் கூறினார்கள். அவை,

- வீட்டிற்கு முன் வேப்பமரம்
- பக்கத்தில் முருங்கைமரம்
- வெளியே பப்பாளிமரம்
- கருவேப்பிலை
- எலுமிச்சை
- சீதா மரம்
- வாழை மரம்
- நெல்லிச்செடி
- மாமரம்
- தென்னை மரம்

( இப்படி வைத்திருந்தால் ஒருவர் கூட பசியுடன் தூங்கமாட்டார்கள். பசியுடன் வாழமாட்டார்கள். )

# 7 நீதிநெறி விளக்கம்



அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும் - நவையஞ்சி
ஈத்துணாச் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலின் பூவாமை நன்று.

- குமரகுருபரர்

**பாடல் பொருள் :**

பலர் நிறைந்த அவையிலே, உடல் நடுங்கித் தம் கருத்தை எடுத்துக்கூற முடியாமல் தடுமாறுபவர் பெற்ற கல்வியும், அவையினர் முன் கல்வியறிவில்லாதவர் பேசும் பொருளற்ற ஆரவாரச் சொல்லும். செய்யத் தக்கவற்றைச் செய்யாமையால் ஏற்படும் குற்றத்துக்கு அஞ்சிப் பிறருக்குக் கொடுத்து எஞ்சியவற்றை உண்ணாதவரின் செல்வமும், வறுமையுற்றவரிடத்தே உள்ள ஈகை போன்ற இனிய பண்புகளும், உண்டாதலைவிட உண்டாகாமல் இருப்பதே நல்லது.

## சொல்பொருள்

மெய் - உடல், விதிர்ப்பார் - நடுங்குவார், கல்லார் - படிக்காதவர், ஆகுலச்சொல் - பொருளற்ற ஆரவாரச் சொல், நவை - குற்றம், அஞ்சி - அச்சமுற்று, நல்கூர்ந்தார் - வறுமையுற்றார், பூத்தல் - உண்டாதல்

## நூல் குறிப்பு

நீதிநெறிகளை விளக்குவதற்குக் கருவியாக இருப்பதால் இந்நூல். நீதிநெறிவிளக்கம் எனப் பெயர் பெற்றது. திருக்குறளில் கூறப் பெற்றுள்ள அறிவுரைகள் பலவற்றையும் தொகுத்துச் சுருக்கமாகவும் தெளிவாகவும் இந்நூல் விளக்குகிறது. இந்நூலை இயற்றியவர் குமரகுருபரர்.

## ஆசிரியர் குறிப்பு



நீதிநெறி விளக்கத்தை இயற்றியவர் குமரகுருபரர். இவர் சண்முகசிகாமணிக்கவிராயர், சுந்தரி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இவர் பிறந்த ஊர் திருநெல்வேலி. இவரின் காலம் கி.பி. 17- ம் நூற்றாண்டு. மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், காசிக் கலம்பகம் மற்றும் பல நூல்களை எழுதியுள்ளார்.

### உரையாடலாம் வாங்க!

- செய்யுளின் பொருள் உணர்ந்து படித்து மகிழ்க.
- முதன்முதலில் மேடையில் பேசிய அனுபவத்தை வகுப்பில் பகிர்ந்து கொள்க.

### சிந்திக்கலாமா?

சம்யுக்தா நன்றாகப் படிப்பவள். ஆனால், வகுப்பில் ஆசிரியர் ஏதாவது கேள்வி கேட்டால் பதில் சொல்லத் தயங்குவாள். அவள் கூச்சத்தை எவ்வாறு போக்கலாம்?

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. ‘நவை’ என்னும் சொல்லின் பொருள் ________________________________

(அ) அச்சம் (ஆ) மகிழ்ச்சி

(இ) வருத்தம் (ஈ) குற்றம்

2. ‘அவையஞ்சி’ இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

(அ) அவைய + அஞ்சி (ஆ) அவை + அஞ்சி

(இ) அவை + யஞ்சி (ஈ) அவ் + அஞ்சி

3. ‘இன்னலம்’ இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________________

(அ) இன் + னலம் (ஆ) இன் + நலம்

(இ) இனிமை + நலம் (ஈ) இனிய + நலம்

4. ‘கல்லார்’ - இச்சொல்லின் எதிர்ச்சொல் ________________________________

(அ) படிக்காதவர் (ஆ) கற்றார்

(இ) அருளில்லாதவர் (ஈ) அன்பில்லாதவர்

## பொருள் கூறுக.

1. அஞ்சி - ____________________________________________

2. மெய் - ____________________________________________

3. கல்லார் - ____________________________________________

4. ஆகுலச்சொல் - ____________________________________________

5. பூத்தல் - ____________________________________________

## பிரித்து எழுதுக.

1. பொருளற்ற - ______________________________________

2. பொருட்செல்வம் - ______________________________________

3. வைத்துக்கொள்வோம் - ______________________________________

4. கல்விச்செல்வம் - ______________________________________

## எதிர்ச்சொல் தருக.

1. உள்ளே x ____________________________________________

2. சரி x ____________________________________________

3. குறைவாக x ____________________________________________

4. மேல் x ____________________________________________

## வினாக்களுக்கு விடையளி

1. கல்வி கற்றவரின் இயல்பு எவ்வாறு இருக்க வேண்டும்?
2. பொருளற்ற சொற்களை அவையினர்முன் பேசுபவர் யார்?
3. பூத்தலின் பூவாமை நன்று என்று நீதிநெறி விளக்கம் எவற்றைக் குறிப்பிடுகிறது?
4. நீதிநெறி விளக்கத்தை இயற்றியவர் யார்?
5. குமரகுருபரர் இயற்றிய நூல்கள் ஏதேனும் மூன்றினைக் கூறுக.

**முதலெழுத்து ஒன்றிவரும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.**

1. அவையஞ்சி ------------------------------ - அவையஞ்சா ------------------------------
2. ------------------------------ - ------------------------------
3. ------------------------------ - ------------------------------



### தமிழோடு விளையாடலாம்

**குறிப்புகளைப்படி.**
**சொல்லிலிருந்தே சொல்லைக் கண்டுபிடி**

| | | |
|---|---|---|
| விலங்குகள் வாழுமிடம் | பாலைவனம் | வனம் |
| பூவின் வேறு பெயர் | பொன்மலர் | |
| பிறருக்குக் கொடுப்பது | கொடைக்கானல் | |
| விலங்குகளுக்கு மட்டும் உண்டு | வௌவால் | |
| பால் தரும் வீட்டுவிலங்கு | கடற்பசு | |

## பின்வரும் வினாக்களுக்கு விடுகதையைக் கண்டுபிடிக்க.

1. ஒரு பெண்ணுக்கு மூன்று கொண்டை - அது என்ன?

| | | | |
|---|---|---|---|

2. அம்மா கொடுத்த தட்டிலே தண்ணீர் விட்டேன். நிற்கவில்ல - அது என்ன?

| | | | | |
|---|---|---|---|---|

3. ஒற்றைக்கல் மனிதனுக்கு ஒன்பது கை - அது என்ன?

| | | |
|---|---|---|

4. ஒருவனைக் கூப்பிட ஊரையே அழைப்பான் - அவன் யார்?

| | | |
|---|---|---|

## கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு வினா எழுதி மகிழ்க.

| | | | |
|---|---|---|---|
| அவள் | இது | செய்தது | சென்றாள் |
| அது | பாடம் | அங்கு | அவன் |
| படித்தான் | என்ன | என்ன | ஏன் |

1. ---------------------------------------------------------------------------

2. ---------------------------------------------------------------------------

3. ---------------------------------------------------------------------------

## லை, கை போன்ற எழுத்துகளில் முடியும் சொற்களை எழுதுக.

(எ.கா : கலை, புகை) “ை” - சங்கிலிகொம்பு என்றும் அழைக்கலாம்.

| “லை” | “கை” |
|---|---|
| | |

## இணைந்து செய்வோம்

**சங்கு சக்கரத்தைச் சுழற்றிக் கல்வியின் பெருமைகளை உணர்த்தும் சொற்றொடர்களை முறையாக எழுதுக.**




### தெரிந்து கொள்வோம்

மூதுரை

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பு அறிய
மாட்டா தவன்நல் மரம்

பாடற்பொருளை ஆசிரியரிடம் கேட்டு அறிந்து கொள்க.

நாளிதழ்கள் மற்றும் சிறுவர் மலர் இதழ்களில் வெளிவரும் கல்விதொடர்பான செய்திகளைத் தொகுக்க.
(தேவையான காலஇடைவெளி தருக.)

# 8 உறவுமுறைக் கடிதம்

எண். 3, விஸ்வநாதபுரம்,
மதுரை.
15.04.2020

அன்புள்ள காஞ்சனா,

நலம். நலமறிய ஆவல். இறைவன் அருளால் உன் குடும்பத்தினரும் நலம் பெற வேண்டுகிறேன். எங்கள் பள்ளியில் விளையாட்டு தினம் விமரிசையாகக் கொண்டாடினோம். அதில் நமது பாரம்பரிய விளையாட்டுகள் என் மனதைக் கவர்ந்தது. அவை பற்றி உன்னோடு பகிர்ந்து கொள்ள ஆசை. அவற்றை விளக்கவே இம் மடல்.

நான் பாண்டி ஆட்டம், கபடி என்று வெளியரங்கு விளையாட்டு களிலும், தாயம், ஐந்தாங்கல், பல்லாங்குழி என்ற உள்ளரங்கு விளையாட்டுகளிலும் கலந்து கொண்டேன். கிச்சுகிச்சு தாம்பாளம், குலைகுலையாய் முந்திரிக்கா, பம்பரம் ஆடுதல், ஆடுபுலி ஆட்டம், கண்ணாமூச்சி ஆட்டம் போன்ற விளையாட்டுகளும் இவ்விழாவில் இடம் பெற்றது. இந்த விளையாட்டுகள் உடலுக்கு வலுவூட்டல், கணக்குப்பயிற்சி, மதிநுட்பம், திறன் மனக்கூர்மை, குதிதிறன் ஆகியவற்றைத் தருகிறது. இவை விளையாட்டுகள் மட்டுமல்ல நமது முன்னோர்கள் குழந்தைகளுக்குப் பகுத்து வழங்கியுள்ள வாழ்வியல் திறனை மேம்பாட்டுப்பயிற்சிகள்.

தமிழரின் பாரம்பரிய விளையாட்டுகள் மூலம் உணர்வுகளைக் கட்டுப்படுத்தவும், கூடிவாழும் இயல்பை வளர்த்துக் கொள்ளவும், வெற்றி தோல்விகளைச் சமமாக நினைக்கவும், கூடி விளையாட வேண்டும் என்ற அழுத்தமான செய்தியினை நமது முன்னோர்கள் வகுத்துச் சென்றுள்ளனர்.





வாடியம்மா வாடி! வண்டாட்டம் வாடி! ஆத்தாங்கரை
பக்கத்திலே காத்திருக்கே வாடி!
“பலிஞ்சடுகுடு, சடுகுடு, சடுகுடு .......... சடுகுடு சடுகுடு
கபடிக்கபடி கபடிக்கபடி ......... கபடிக்கபடி கபடி
ஊசி ஊசி கம்மந்தட்டு ஊட்டப்பிரிச்சிக்கட்டு, காசுக்கு ரெண்டு தட்டு,
கருணைக்கிழங்குடா, தோலை உரியடா, தொண்டையில் வையடா ......
வையடா ....... வையடா .......”



என்று பாடியபடி நாங்கள் ஆடிய கபடி விளையாட்டு, பார்வையாளர்களை மகிழ்ச்சிப்படுத்தியது. “பாடலோடு ஆடல்” தெரியும். பாடலோடு விளையாட்டு எங்களுக்குப் புதிய அனுபவமாக இருந்தது.

கை + பிடி = கபடி கபடி அல்லது சடுகுடு அல்லது பலிஞ்சடுகுடு என்று அழைக்கப்படும் விளையாட்டு தமிழ்க்குடிகளால் பல காலமாக, விளையாடப்படும் தமிழர் விளையாட்டுகளுள் ஒன்று. சல்லிக்கட்டிற்கு (ஏறுதழுவுதல்) தயாராகும் முன் தமிழர்கள் செய்யும் பயிற்சியே கபடி என்ற பெயரால் பலகாலமாக விளையாடப்பட்டு வருகிறது.



பிற்பகலில் நான் பல்லாங்குழி ஆடினேன். பல்லாங்குழி உடல் ரீதியாக பெண்ணின் விரல் மட்டும் கைகளுக்கு வலுசேர்க்கிறது. இல்லற வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கும் பெண்கள் குடும்பத்தின் வரவுசெலவுகள், சொத்துப்பங்கீடு, சேமிப்பு, பொருளீட்டல் ஆகிய வற்றைக் கண்டிப்பாக தெரிந்து கொள்ளுதல் அவசியம்.

மேற்சொன்ன அனைத்தையும் விளையாட்டின் வழியே பெண்களின் மனதில் பதிய வைக்க நம் முன்னோர்கள் கண்டறிந்த வழியே பல்லாங்குழி ஆகும். தாய விளையாட்டில் என் கண்கள் தாயத்தின் மீதே இருந்தன. விழும் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஏறுவதும் இறங்குவதுமாய் என் ஆர்வத்தைத் தூண்டியது. ஏற்றத்திற்கான நல்ல வழிகளையும், இறக்கத்திற்கான தீய வழிகளையும் தெரிந்து கொண்டேன். மஹாபாரத காலத்தில் இது விளையாடப்பட்டதாக வரலாறு உண்டு. இது பார்க்க சுலபமாகத் தெரிந்தாலும் வெற்றி பெற யுத்த தந்திரம் வேண்டும். வாழ்வின் ஒழுக்கத்தை அறிந்து கொள்ளும் சரியான விளையாட்டு.

“கல்லாட்டம், நொண்டி, சிறுமிகள் தெருக்களில் விளையாடும் விளையாட்டு, ஐந்தாங்கல்” ஆகிய விளையாட்டுகள் சீனா, பர்மா, இலங்கை போன்ற நாடுகளிலும் விளையாடப்படுகின்றன. தூக்கிப் போட்டு விளையாடும் பொழுது கவனச்சிதறல் வராமல் ஒருமுகப்படுத்தி வெற்றி பெறுதல் சிறந்த பயிற்சியாகிறது. அடுத்து கல்லில் விரல்படாது எடுத்து ஆடுகையில், விரலின் பங்கோடு எண்ணமும் சரியாகப் பங்காற்றுகிறது. கைகளுக்கு வலிமை சேர்க்கின்றது.

“கரும்பு தின்னக் கூலியா?” என்பது போல எனக்கு விருப்பமான விளையாட்டுகளை எல்லாம் ஆசை தீர விளையாடினேன். அந்த நாள் முழுவதும் சோலையில் சுற்றும் தேனீபோல மகிழ்வுடன் விளையாடினேன். என்னோடு நீயில்லாதது மட்டும் சிறு வருத்தம். நீயும் உன் பள்ளியில் கொண்டாடப்போகும் இது போன்ற விழாவில் கலந்து கொண்டு இன்புற வேண்டும். நம் பாரம்பரிய விளையாட்டுகள் பெருமையின் அடையாளம் மட்டுமன்று; நன்மையின் விளைநிலமும் ஆகும். இக்கடிதம் குறித்து உன் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.



என்றும் அன்புடன்,
நிரஞ்சனா

உறைமேல் முகவரி
காஞ்சனா
எண்.40, மைலாப்பூர்
சென்னை

**உரையாடலாம் வாங்க!**



உறவுமுறைக் கடிதத்தில் உள்ள செய்திகளை சொந்த நடையில் கூறுக.



**சிந்திக்கலாமா?**

சூழல் 1 :
நவீன் தான் நினைப்பதையெல்லாம் தன் மாமாவிடம் சொல்ல நினைப்பான். ஆனால், அலைபேசியில் பேசும்போது அத்தனையும் மறந்துவிடுவான்.

சூழல் 2 :
குழலி, தான் பேச நினைப்பதையெல்லாம் ஒன்றுவிடாமல் கடிதத்தில் எழுதித் தன் அக்காவுக்கு அனுப்புவாள்

மேற்கண்ட சூழல்கள் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? எது சிறந்தது என நீ கருதுகிறாய்?

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. ‘நற்பண்பு’ - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது____________________

   (அ) நல்ல + பண்பு (ஆ) நற் + பண்பு

   (இ) நல் + பண்பு (ஈ) நன்மை + பண்பு

2. பின்வருவனவற்றுள் எது உள்ளரங்க விளையாட்டு இல்லை?------------

   (அ) தாயம் (ஆ) ஐந்தாங்கல்

   (இ) பல்லாங்குழி (ஈ) கபடி

3. ‘பாரம்பரியம்’ - இச்சொல்லுக்குரிய பொருளைத் தராத சொல்

   (அ) அண்மைக்காலம் (ஆ) தொன்றுதொட்டு

   (இ) தலைமுறை (ஈ) பரம்பரை

## வினாக்களுக்கு விடையளி

1. தமிழகப் பாரம்பரிய விளையாட்டுகள் எவை?
2. உள்ளரங்க விளையாட்டுகளின் பெயர்களை எழுதுக.
3. கடிதத்தில் இடம் பெற்றுள்ள பழமொழியின் பொருள் யாது? --------------



## தமிழோடு விளையாடலாம்







| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கி | ளி | த் | த | ட் | டு | கா |
| ப | ம் | ப | ர | ம் | கு | யா |
| ல் | அ | ம் | மா | னை | டு | ப |
| லா | தா | ய | ம் | ம | ச | ழ |
| ங் | ஆ | டு | பு | லி | கோ | மா |
| கு | ஐ | ந் | தா | ங் | க | ல் |
| ழி | கி | ட் | டி | ப் | பு | ள் |





## கலையும் கைவண்ணமும் - காகிதத்தில் பூ செய்யலாமா?



## உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க



விளையாட்டும் பொழுதுபோக்கும் ஓரினத்தின் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் பெறுவன. சங்ககாலத்தில் இளையவரும், முதியவரும் பலவகையான விளையாட்டுகளிலும் பொழுது போக்குகளிலும் ஈடுபட்டனர். அவற்றுள் ஒன்று, ஏறுதழுவுதல். முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள், கூரிய கொம்புகளை உடைய காளைகளை அடக்குவதனை வீர விளையாட்டாகக் கருதினர்.

### வினாக்கள்

1. ஓரினத்தின் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடப்படுவன யாவை?
2. ஏறுதழுவுதல் என்றால் என்ன?
3. உரைப்பகுதியில் இடம் பெற்றுள்ள எதிர்ச்சொற்களை எழுதுக.
4. ஏறுதழுவுதல் எந்த நிலத்துடன் தொடர்புடையது?
5. நிரப்புக. ஏறுதழுவுதல் என்பது _________________________ விளையாட்டு.
   ( உள்ளரங்க / வெளியரங்க )

### தெரிந்து கொள்வோம்

கடிதத்தில் அனுப்புநர், பெறுநர், முகவரி தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். இல்லையெனில் அனுப்பியவர்க்கே திரும்பி வந்துவிடும்.

### செயல் திட்டம்

எவையேனும் பத்து விளையாட்டுகளின் பெயர்களையும், அவற்றிற்குரிய படங்களையும், திரட்டிப் படத்தொகுப்பை உருவாக்குக.

# 9 காவ்யா



ஒரு ஊரில் சந்திரன், இந்திரன் ஆகிய இருவரும் அண்ணன் தம்பிகளாக வாழ்ந்து வந்தனர். அண்ணன் சந்திரன் செல்வச்செழிப்புடன் வாழ்ந்தான். அவன் தம்பி இந்திரனோ வறுமையால் வாடினான். எனவே அவன் தன் அண்ணன் சந்திரனிடம் சென்று தன் வறுமை நிலையை விளக்கி தனக்கு கறவைப்பசு ஒன்று தருமாறு கேட்டான். அதைக் கொண்டு பால் வியாபாரம் செய்து தன் வறுமையைப் போக்கிக் கொள்கிறேன் என்று சொன்னான். அண்ணன் சந்திரன் அதற்கு ஒத்துக் கொண்டான். தம்பியிடம் பசுவைக் கொடுப்பதற்குமுன், “தன் நிலத்தில் அவன் ஓராண்டு உழைக்க வேண்டும்” என்று கூறினான்.

தம்பியும் அண்ணனுடைய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு அவன் நிலத்தில் ஓராண்டு முழுவதும் உழைத்தான். ஓராண்டு முடிந்ததும் தம்பி வேலைக்குச் செல்லவில்லை. மறுநாளே சந்திரன் இந்திரனைச் சந்தித்து, “நீ ஏன் இன்று தோட்டவேலைக்கு வரவில்லை?” என்று கூறி தான் கொடுத்த பசுவைத் திருப்பிக் கேட்டான்.

ஒப்பந்தப்படி ஓராண்டு உன் நிலத்தில் உழைத்தேன் அல்லவா, எனவே பசு எனக்குத்தான் என்று பசுவை தர மறுத்தான் தம்பி இந்திரன்.

“அதெப்படி முடியும்? கடந்த ஓராண்டு காலமும் நீ என் பசுவிடம் பால் கறந்து அதன் பலனை அனுபவித்தாய் அல்லவா? அதனால் இரண்டிற்கும் சரியாகிவிட்டது என்று வாதிட்டான். இருவருக்கும் வாய்ச்சண்டை முற்றியது. அதனால் தங்களுக்குச் சரியான தீர்ப்பைத் தேடி, ஊர்த்தலைவரிடம் சென்றனர். வழக்கை விசாரித்த தலைவர் அவர்கள் இருவருக்கும் மூன்று புதிர்களைச் சொன்னார். இவற்றிற்கு சரியான பதில்களை யார் சொல்கிறீர்களோ அவர்களுக்குத்தான் பசு” என்று கூறினார். போட்டிக்கு இருவரும் ஒத்துக்கொண்டு தலைவரின் தீர்ப்பை ஏற்பதாக உறுதியளித்தனர்.

“முதல் புதிர், மனிதனுடைய வயிற்றை நிரப்புவது எது? இரண்டாவது புதிர், மனிதனுக்கு மிக மகிழ்ச்சியைத் தருவது எது? மூன்றாவது புதிர், அதிக விரைவாகச் செல்வது எது? இந்த மூன்று புதிர்களுக்கும் தீரயோசித்து நாளை விடை கூறுங்கள்” என்றார். இருவரும் வீட்டிற்குச் சென்றனர். அன்று இரவு முழுவதும் மூளையைக் குழப்பிச் சிந்தித்தனர்.

மறுநாள் காலை ஊர்த்தலைவரிடம் சென்றனர். அண்ணன் சந்திரனை தலைவர் அழைத்து, என் புதிர்களுக்கு உன்னுடைய விடை என்ன? சொல் என்றார்?

சந்திரன் அவரிடம் ஐயா! ஒரு மனிதனுடைய வயிற்றை நிரப்புவது என்பது தங்களின் முதல் புதிர். அதற்கான சரியான விடை அறுசுவை உணவே! வயிறு முட்ட உண்டால் பல மணி நேரம் பசிக்காது.

“இரண்டாவது மனிதனுக்கு மகிழ்ச்சியைத் தருவது எது?” என்றீர்கள். அதற்கான விடை பணம். பெட்டி நிறைய பணம் இருக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

“மூன்றாவதாக அதிவேகமாகச் செல்வது எது?” என்று கேட்டீர்கள். “அதற்குச் சரியான விடை வேட்டைநாய். வேட்டைநாய்கள் வெகு விரைவாக ஓடி முயல்களைப் பிடித்து விடுகின்றனவே” என்று கூறிவிட்டு தலைவரைப் பார்த்து இப்பொழுது “பசு எனக்குத் தானே” என்று கேட்டான்.

மூத்தவனே, நீ சொன்ன அனைத்து விடைகளும் அபத்தமானவை என்று ஊர்த்தலைவர் சந்திரனுக்குப் பதிலளித்தார்.



இப்பொழுது தம்பி இந்திரன் அழைக்கப்பட்டான். அவன் தலைவரை வணங்கி புதிர்களுக்கு விடை கூறினான்.

“நம் வயிற்றை நிரப்புவது பூமி. பூமித்தாயிடம் தான் நாம் உண்ணும் தானியங்கள், காய்கறிகள் அனைத்தும் கிடைக்கின்றன. அந்த உணவால் தான் பறவைகளும் விலங்குகளும் வாழ்கின்றன!”

“இரண்டாவது மனிதனுக்கு அதிக மகிழ்ச்சி தருவது தூக்கம். தூக்கத்திற்காக எத்தகைய செல்வத்தையும் மனிதன் விட்டுவிடுவான்.”

“மூன்றாவது அதிவிரைவாகச் செல்வது நமது சிந்தனை ஓட்டம். அது நாம் விரும்பியபோது விரும்பிய இடத்தை அடையச் செய்யும்” என்று கூறினான்.

ஆஹா! மிகச் சரியான விடைகள். இந்தப் பசு உனக்குத்தான் என்று கறவைப்பசுவைத் தம்பி இந்திரனுக்கே தலைவர் கொடுத்தார். பின் இந்திரனைப் பாரத்து இந்தப் புதிர்களுக்கு உனக்கு விடை கூறியது யார்? என்று கேட்டார்.

“என் மகள் காவ்யா, ஐயா!”

“அவள் என்ன அவ்வளவு புத்திசாலியா!” என்றார் ஊர்த்தலைவர்.

ஆமாம் ஐயா! எங்கள் வீட்டிலேயே அவள் சற்று முன்னோக்கிச் சிந்திக்கக்கூடியவள். உயர்நிலைப்பள்ளியில் படித்து வருகிறாள். வீட்டு வேலைகளில் குடும்பத்தினர் அனைவருக்கும் உதவியாக இருப்பாள்.

அப்படியா! மிக்க மகிழ்ச்சி. அவள் எந்த அளவிற்கு சிந்தனைத்திறன் படைத்தவள் என்பதை சோதித்து பார்த்து விடுகிறேன். இதோ நான் உன்னிடம் பத்து அவித்த முட்டைகளைத் தருகிறேன். இவைகளை உன் மகளிடம் கொடுத்துவிடு. அவைகளை ஒரு கோழியைக் கொண்டு அடைகாக்க வைத்து, பத்துக்குஞ்சுகளை ஒரே இரவில் கோழியாக்கி அத்தனையும் முட்டையிட வைக்க வேண்டும். அவைகள் இட்ட பத்து முட்டைகளில் மூன்று முட்டைகளை நாளை காலைஉணவிற்கு எனக்குக் கொண்டு வரச்சொல் என்று சொன்னார். இளையவன் இந்திரன் தன் மகளிடம் ஊர்த்தலைவர் சொன்னதை அப்படியே சொன்னான்.

தலைவரின் இந்தப் புதிருக்கு எப்படி விடை சொல்லப் போகிறாளோ? என்று அதிர்ந்து போனான். ஆனால் அவன் மகள் காவ்யாவோ, எதிர் புதிர் ஒன்று போட்டாள். தன் தந்தையிடம் ஒரு பானை நிறைய வேக வைத்த துவரை விதைகளைக் கொடுத்து இந்த துவரையை ஊர்த்தலைவர் நிலத்தில் விதைத்து துவரைச்செடி வளர்த்து பூத்துக் காய்த்தவுடன் முற்றிய துவரையை அறுத்து எனது கோழிக்குஞ்சுகளுக்கு உணவைக் கொடுக்க தயாராக வைத்திருக்கும்படி கூறுங்கள் என்றாள். அவள் தந்தையும் ஊர்த்தலைவரிடம் பானை நிறைய அவித்த துவரையைக் கொடுத்து தன் மகள் கூறியதை அப்படியே சொன்னார்.

துவரையைப் பெற்றுக்கொண்ட தலைவர் அவற்றை நாய்க்குப் போட்டுவிட்டு இந்திரனிடம் சணல்கண்டு ஒன்றைக் கொடுத்தார். நல்லது நீ இந்த சணல்கண்டை உன் மகளிடம் கொடுத்து இதை ஊறவைத்துக் காய வைத்து நல்ல தரமான துணி தயாரிக்கச் சொல் என்று அனுப்பி வைத்தார். தன் தந்தையிடம் தலைவர் கொடுத்த சணல் கண்டைப் பெற்றுக்கொண்ட காவ்யா, அதற்குப் பதிலாக மிக மெல்லிய குச்சி ஒன்றைக் கொடுத்து அப்பா தலைவரிடம் இக்குச்சியைத் தந்து இதிலிருந்து நூலை நூற்பதுக்கு ஒரு ராட்டை செய்து தரும்படி கூறுங்கள்! என்றாள். அவள் அறிவின் ஆழத்தைக் கண்ட தலைவர் வியந்து போனார். உன் மகள் காவ்யாவை நாளை என்னை வந்து பார்க்கச் சொல் என்றார்.

ஆனால் ஒரு கட்டளை. அவள் நடந்தோ எதன் மீதும் சவாரி செய்தோ வரக்கூடாது. வெறுங்காலுடனோ, காலணியுடனோ வரக்கூடாது. பரிசுடனோ, பரிசின்றியோ வரக்கூடாது. இது என் கடுமையான உத்தரவு என்றார்.

தந்தை சொன்ன தலைவரின் உத்தரவை கேட்ட காவ்யா, என்ன வினோதமான உத்தரவு? இதற்கு எப்படி தீர்வு காண்பது என்று சிந்தித்தாள். தன் தந்தையின் உதவியுடன் நான்கு சிறு சக்கரங்களைக் கொண்ட தரையில் உருண்டு செல்லக்கூடிய ஒரு பலகை வண்டியை தயார் செய்தாள். தான் செல்லமாக வீட்டில் வளர்த்து வந்த ஆடுகளையே அவளுடைய வண்டியை இழுத்துச் செல்லப் பழக்கினாள். வீட்டில் வளர்த்த முயல்குட்டி ஒன்றையும் எடுத்துச் நெஞ்சில் அணைத்தவாறு ஆடுகளை ஓட்டிக்கொண்டு ஊர்த்தலைவர் வீடு நோக்கிச் சென்றாள். சிட்டுக்குருவி ஒன்றை யாருக்கும் தெரியாமல் மறைத்துச் சென்றாள். தன் ஒரு காலில் மட்டும் காலணி அணிந்து கொண்டு அவள் தெருவழியே செல்வதை மக்கள் வேடிக்கையாகவும் வினோதமாகவும் பார்த்தனர்.



இந்திரன் மகள் காவ்யா மிகுந்த புத்திசாலித்தனத்துடன் தன் வீட்டை நோக்கி வருவதைக் கண்ட ஊர்த்தலைவர் அவள் மீது நாய்களை ஏவினார். நாய்கள் குரைத்துக் கொண்டு அவளின் வினோதமான வண்டியை நோக்கி சீறிப் பாய்ந்தன. நாய்களின் சீற்றத்தைக் கண்டு சிறிதும் பயப்படாமல் தான் நெஞ்சோடு அனைத்து வந்த முயலை நாய்களை நோக்கி விட, நாய்கள் முயலைத் துரத்தின. தடைகள் ஏதுமின்றி காவ்யா தலைவரை சந்தித்து இதோ உங்களுக்கு என் அன்புப்பரிசு என்று தான் மறைத்துக் கொண்டுவந்த சிட்டுக்குருவியைக் கொடுத்தாள். அது அவர் கைகளில் அகப்படாமல் பறந்து சென்றது. தான் போட்ட உத்தரவுப்படியே வந்து விட்ட காவ்யாவின் புத்திக்கூர்மையைத் தலைவர் பெரிதும் பாராட்டினார். பின்பு பரிசுகள் பல கொடுத்து காவ்யாவை அனுப்பிவைத்தார்.

**நீதி : வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.**
**வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.**

**உரையாடலாம் வாங்க!**



நீங்கள் அறிந்திருக்கும் புதிர்கதைகளுள் ஒன்றை வகுப்பில் பகிர்ந்து கொள்க.

**சிந்திக்கலாமா?**



இக்கதையில் வரும் அண்ணனைப்போல் நீ இருந்தால், தம்பிக்கு என்ன செய்திருப்பாய்? கூறுக.

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. ‘தினமும்’ என்ற சொல்லின் பொருள் ____________________

(அ) நாள்தோறும் (ஆ) வேலைதோறும்

(இ) மாதந்தோறும் (ஈ) வாரந்தோறும்

2. ‘பனிச்சறுக்கு’ இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

(அ) பனி + சறுக்கு (ஆ) பனிச் + சறுக்கு

(இ) பன + சறுக்கு (ஈ) பன் + சறுக்கு

3. ‘வேட்டை + நாய்’ இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ______

(அ) வேட்ட நாய் (ஆ) வேட்நாய்

(இ) வேட்டைநாய் (ஈ) வேட்டநாய்

## வினாக்களுக்கு விடையளி

1. ஓராண்டு நிலத்தில் உழைத்தவர் யார்?
2. புதிருக்குச் சரியாக விடையளித்தவர் யார்?
3. ஊர்த்தலைவர் பசுவை யாருக்குக் கொடுத்தார்?
4. காவ்யா ஊர்த்தலைவருக்குக் கொடுத்த பரிசு என்ன?

## எதிர்ச்சொல்லுடன் இணைப்போமா?

| | |
|---|---|
| குறைய | இளைத்த |
| மெல்லிய | முடியாது |
| முடியும் | மெதுவாக |
| விரைவாக | தடித்த |
| கொழுத்த | நிறைய |

## இணைந்து செய்வோம்

### விளையாடலாம் வாங்க! தூண்டில்மீன் விளையாட்டு!

மீன் வடிவத்தில் அட்டைகளை வெட்டிக்கொண்டு அட்டையில் பின்வரும் சொற்களை எழுதிக் கொள்ள வேண்டும். அட்டையில் குண்டூசியைக் குத்தி, வகுப்பறையின் நடுவில் வட்டமிட்டு அதில் அட்டைகளைப் பரப்பி வைக்க வேண்டும். ஒரு குச்சியின் நுனியில் நூலின் ஒரு முனையைக் கட்ட வேண்டும். மறுநுனியில் காந்தத்தை வைத்துக் கட்டிக் கொள்ள வேண்டும். வகுப்பறையில் பெரியதொரு வட்டமிட்டு வட்டத்தில் ஓர் அம்புக் குறியிட வேண்டும். வட்டத்தில் மாணவர்களை ஓட விட வேண்டும். ஆசிரியர் ஊதலை ஊதியவுடன் மாணவர்கள் வட்டத்தில் நிற்க வேண்டும். அம்புக் குறியிட்ட இடத்தில் எந்த மாணவர் நிற்கிறாரோ அவர், தூண்டில் மூலம் ஓர் அட்டையை எடுத்து, அதில் உள்ள சொல்லுக்குப் பன்மைச்சொல் கூற வேண்டும்.

எடுத்துக்காட்டு : முட்டை - முட்டைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| புதிர் | துவரை | கோழி | நாய் | துணி |
| குச்சி | வண்டி | பரிசு | முயல் | குருவி |

## கலையும் கைவண்ணமும்

### வரைந்து வண்ணமிட்டு மகிழ்வோம்!

பாதி என்னிடம் மீதி உன்னிடம் வரைந்து வண்ணம் தீட்டுக.





## தமிழோடு விளையாடலாம்

### மண்குடம்

1. மகுடம்  2. குடம்  3. மடம்
4. மண்  5. ------------  6. ------------

### புதையல்

1. ------------  2. ------------  3. ------------
4. ------------  5. ------------  6. ------------

### விடுகதை

1. ------------  2. ------------  3. ------------
4. ------------  5. ------------  6. ------------

### தெரிந்து கொள்வோம்

விடுகதைகளுக்கு ஒன்பது வடிவங்கள் உள்ளன.
1. புதிர் 2. சொல் விளையாட்டு 3. மாற்றெழுத்துப் புதிர், 4. வினோதச் சொற்கள் 5. எழுத்துக் கூட்டு 6. விகடம் 7. ஓவியப்புதிர் 8. சொற்புதிர் 9. நொடிவினா

## சொல்லுக்குள் சொல் கண்டுபிடி!

கொடுக்கப்பட்ட சொல்லின் பொருள் கட்டத்திலுள்ள எழுத்துகளுள் ஒளிந்திருக்கிறது. கண்டுபிடித்து எழுதுக.

சதம் = ?

| | | | |
|---|---|---|---|
| க | ண் | நூ | கை |
| எ | சி | ஃ | மி |
| அ | று | யா | பி |

= நூறு

சித்திரம்

| | | | |
|---|---|---|---|
| ஓ | ர | ய | யா |
| ரே | கே | ஏ | பி |
| ர் | ம் | ஃ | வ் |
| ப | ல | ஓ | வி |

= -------------------

நட்சத்திரம்

| | | | |
|---|---|---|---|
| ரி | ற் | மீ | ரு |
| இ | வி | லை | பே |
| ற் | ண் | மீ | ன் |

= -----------------------




உங்கள் வீட்டிலுள்ள பெரியவர்களிடம் கேட்டு, 20 விடுகதைகள் எழுதி வருக.

## கண்டுபிடிக்கலாம் வாங்க..



- குழந்தைகளை வட்டமாக உட்கார வைக்கவும்.
- டக்.டக். எனக்கூறி ஒருவரை விளையாட்டைத் தொடங்கச் செய்யவும்.
- வட்டத்தில் அடுத்திருப்பவர் யார் அங்கே எனக் கூற வேண்டும்.
- அடுத்திருப்பவர் ஒரு பெயரையும், ஒரு செயலையும் கூற வேண்டும்.
- பதிலளிக்கக் கொடுக்கப்படும் நேரம் 10 வினாடிகள்.
- எடுத்துக்காட்டு: கண்ணன் பாடினான், மாதவி ஆடினாள்.
- குறித்த நேரத்திற்குள் பதில் கூறமுடியாதவரை ஆட்டத்திலிருந்து வெளியேற்றவும்.
- இறுதிவரை இருப்பவரே விளையாட்டில் வெற்றி பெற்றவராவார்.



- குழந்தைகளைச் சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஆசிரியர் குறிப்பிட்ட சில சொற்களைக் கூறவும்.
( எ.கா. : உதவி, மாலை, பதவி )
- குழந்தைகளை அச்சொற்களைப் பயன் படுத்தித் தங்கு தடையின்றியும், பொருள் உடையதாகவும் பேசப் பழக்கவும்.
- குறிப்பிட்ட நேரத்தில் சிறப்பாகப் பேசிய குழுவினரைப் பாராட்டவும்.

## அகர முதலி

1. அதிகம் - மிகுதி
2. அதிகரித்தல் - மிகுதல்
3. அபத்தமான பதில்கள் - பொய்யான விடைகள்
4. அவசியம் - தேவை
5. அற்புதம் - வியப்பு / புதுமை
6. ஆச்சரியம் - வியப்பு
7. ஆமோதித்தன - உடன்பட்டன
8. ஆர்வம் - ஈடுபாடு
9. ஆனந்தம் - மகிழ்ச்சி
10. இயைந்து - பொருந்தி
11. இரசிகர்கள் - சுவைஞர்கள் ( இரசித்தல் - சுவைத்தல் )
12. இராகம் - இன்னிசை
13. இன்னல் - துன்பம்
14. உற்சாகம் - மகிழ்ச்சி / ஊக்கம்
15. எதிரொலி - ஒலியைக் கேட்டு மீண்டும் ஒலித்தல்
16. கிரீடம் - மணிமுடி
17. கேலி - விளையாட்டுப்பேச்சு / நையாண்டி
18. சிந்தை - மனம்
19. சீர்கேடு - ஒழுக்கக்குறைவு
20. சுகம் - இன்பம் / நலம்
21. சுருதி - இசைவகை
22. செருமியது - இருமியது
23. தத்துவம் - உண்மைநிலை
24. தைரியம் - துணிவு
25. நிரூபித்தல் - மெய்ப்பித்தல்
26. நுண்மை - நுட்பம்
27. பழுதான - பயன்படுத்த முடியாத
28. பாதிப்புகள் - விளைவுகள்
29. பாரம்பரியம் - தொன்றுதொட்டு / பரம்பரை
30. புத்திசாலித்தனம் - அறிவுக்கூர்மை
31. மனமார்ந்த - மனம் நிறைந்த
32. மாசு - குற்றம் / அழுக்கு
33. லேசாய் - மெதுவாய்
34. வம்பு - வீண்பேச்சு
35. விசேஷம் - சிறப்பு
36. வெட்கம் - நாணம்

# கற்றல் விளைவுகள்

| கேட்டல் | பேசுதல் | படித்தல் | எழுதுதல் |
|---|---|---|---|
| • ஓசைநயமும் கருத்தும் மிக்க பாடல்கள், புதிர்க் கதைகளைக் கேட்டுப்புரிந்து கொள்வர்.<br>• சூழ்நிலையில் தாம் உற்றுக்கேட்ட பல்வேறு விவரங்களைப் புரிந்து கொண்டு வெளிப்படுத்துவர்.<br>• தொடர் வாய்மொழிக் கூற்றுகளையும் விடுகதைகளையும் கேட்டுப் புரிந்து கொள்வர்.<br>• பிறர் கூறுவதைக் கவனமுடன் கேட்டல் / வினாக்கள் எழுப்புதல் அவற்றின் மீதான தங்கள் கருத்துகளை / எதிர் வினைகளை வெளிப்படுத்துவர். | • தங்குதடையின்றி இயல்பாகத் தொடர்ந்து பேசுவர்<br>• எளிய வருணனைச் சொற்களைக் கலந்து பேசுவர்.<br>• தெளிவாகப் பொருள் விளங்க ஒப்பிப்பர்.<br>• கதைகள், பாடல்களைத் தங்கள் சொந்த நடையில், தாம் விரும்பும் வகையில் தம் கருத்துகளையும் இணைத்துச் சொல்வர்.<br>• விடுகதைகளுக்கு விடை கூறுவர்.<br>• பல்வேறு படைப்புகளின் தலைப்புகள் சூழல், கதை மாந்தர்கள் குறித்துப் பேசுதல், தனிப்பட்ட கருத்துகளை வெளிப்படுத்துவர்.<br>• எளிய வகுப்பறைக் கருத்தாடல், கலந்துரையாடலில் பங்கேற்பர்.<br>• தேசிய மாநில அளவிலான, சமூக உணர்வுபூர்வமான செய்திகளை இனங்கண்டு அவற்றின் மீது கருத்தாடல் செய்வர். | • சிறு சிறு உரைப்பகுதிகளை நிறுத்தற்குறிகளுக்கு ஏற்பப் படிப்பர்<br>• சிறு சிறு கதைகள், பாடல்களை உரிய ஒலிப்புடன் பொருள் விளங்கப் படிப்பர்.<br>• படிக்கும் பகுதியில் இடம்பெறும் பழமொழிகள், மரபுச்சொற்களை அறிவர்.<br>• செய்தித்தாள்கள், சுவரொட்டிகள், அறிவிப்புகள், விளம்பரங்கள் ஆகியவற்றைப் படித்துப் புரிந்து கொள்வர்.<br>• படித்து உணர்ந்தவற்றோடு தங்கள் அனுபவங்களையும் தொடர்புபடுத்துவர்<br>• உரைப்பகுதிகளைப் படித்து வினாக்களுக்கு விடையளிப்பர்.<br>• தாங்கள் விரும்பும் நூல்களைத் தெரிந்தெடுத்துப் படிக்க ஆர்வம் கொள்வர்.<br>• ஒரே பொருண்மையுள்ள பல்வேறு சொற்களுக்கு இடையிலான நுட்பமான வேறுபாடுகளை அறிந்து பயன்படுத்துவர். | • உரைப்பகுதியை உரிய நிறுத்தற்குறிகளுடன் எழுதுவர்.<br>• எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுசிறு உரைப் பகுதிகளைத் தமக்கான நடையில் எழுதுவர்.<br>• பொருத்தமான நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்தி எழுதுவர்.<br>• திருக்குறள், செய்யுள் பகுதிகளை அடி பிறழாமல் எழுதுவர்.<br>• பல்வேறு நோக்கங்களுக்கேற்ப / சூழல்களுக்கேற்ப எழுதுவர்.<br>• உறவு முறைக் கடிதம்<br>• சிறுசிறு கட்டுரைகள்<br>• புதிய பொருண்மைகளை உணர்ந்து தம் சொற்களில் (பேச்சில் / எழுத்தில் ) பயன்படுத்துவர்.<br>• கற்பனையாகக் கதை எழுதுவர்.<br>• எழுதியவற்றைத் தாமே மதிப்பீடு செய்வர். |

| நடைமுறை இலக்கணமறிந்து, பேச்சிலும், எழுத்திலும் பயன்படுத்துவர். | கற்கக் கற்றல் | சொற்களஞ்சியப் பெருக்கமும், சொல்லாட்சித் திறன்களும் |
|---|---|---|
| • ஐம்பால் வகையறிவர் - ( ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் )<br>• உரிய இணைப்புச் சொற்களைப் பொருத்தமான இடங்களில் சேர்த்து எழுதுவர். (ஆனால், எனவே...)<br>• காலம் அறிவர் ( இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் )<br>• எழுவாய்<br>• பயனிலை அறிமுகம்<br>• பெயர்ப் பயனிலை<br>• வினைப் பயனிலை<br>• வினாப் பயனிலை | • குழந்தைகளுக்கான எளிய அகரமுதலி களைப் பயன்படுத்த அறிவர்.<br>• கணினியில் உரைகள், வசனங்கள், முழக்கத் தொடர்கள் கேட்பர்.<br>• தகவல்கள், சொற்பொருள்கள் தேடி அறிவர்.<br>• கதைநூல்கள் படிப்பர். | • கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்<br>• தொழிலாளர், தொழில்சார் பெயர்கள்<br>• சிறப்பு வாய்ந்த நகரங்கள், ஊர்களின் பெயர்கள்<br>• இன்றியமையா இடங்களின் பெயர்கள் ( இந்திய மாநிலங்கள், தமிழ்நாட்டின் மாவட்டங்கள்) பழமொழிகள்<br>• மரபுத்தொடர்கள்<br>• கணினி இணையம் சார்பில் கலைச்சொற்கள்<br>• சொற்களஞ்சியப் பெருக்கத்திற்காகப் படித்தல்<br>• சிறுவர்களுக்கான கதைகள், பாடல்கள் படித்தல் |
| **படைப்புத்திறன்கள்** | **விழுமியங்களை உணர்ந்து பின்பற்றும் திறன்** | **வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுவர்.** |
| • விளம்பரங்கள் உருவாக்குதல்<br>• அறிவிப்புகள், நிகழ்ச்சி நிரல் உருவாக்குதல்<br>• குறுந்தகவல்கள், நகைச்சுவைத் துணுக்குகள் உருவாக்குதல்<br>• பாடலின் வரிகளை மாற்றிப் பாடுதல்?<br>• கற்பனைக் கடிதம் எழுதுதல் | • காலம் தவிர்க்காமை<br>• விதிகளைப் பின்பற்றுதல்<br>• தூய்மை பேணுதல்<br>• பிறர்க்கு உதவுதல்<br>• அன்பு காட்டுதல்<br>• கூட்டுணர்வு<br>• நட்புணர்வு<br>• உண்மை பேசுதல்<br>• சேமிப்புணர்வு<br>• சிக்கனம்<br>• நேர்மை<br>• நன்றியுணர்வு<br>• தன்னம்பிக்கை | • தன்னை அறியும் திறன்<br>• சிக்கல் தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>• சிறந்த தகவல் தொடர்புத் திறன்<br>• இணக்கமான உறவுக்கான திறன்கள்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மனஅழுத்தத்தைக் கையாளும் திறன் |